Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 25 வெள்ளிக்கிழமை (07.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 129

## பிரித்தானியாவின் விசேட பிரதிநிதி வார இறுதியில் கொழும்புக்கு

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கை தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுபபான மூத்த இராஜதந்திரியான விக்கிமொரேலி இந்தவார இறுதியில் கொழும்புக்கு வரவுள்ளார்.

கொழும்பில் பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து ஜெனிவாத் தீர்மானம் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு, பிரெஞ்சு மொழி பேசும நாடுகளின் ஆதரவைத் திரட்டும் பொறுப்பு பிரான்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கும் பிரித்தானியாவே, பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளின் ஆதரவைத் திரட்டித் தருமாறு பிரான்சிடம் கேட்டுள்ளது.

அதேவேளை, கொமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பிரித்தானியா ஈடுபட்டுள்ளது.

## உட்கட்டுமானத்தில் சீனாவின் ஆதிக்கம்



### இந்திய அமைச்சர் குர்ஷித் கவலை

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகளின் உட்கட்டமைப்புத் திட்டங்களில் சீனாவின் தலையீடு அதிகரித்து வருவது குறித்து இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் சமர்ப்பித்த எழுத்து மூல அறிக்கையில்,

இலங்கை, பங்களாதேஷ், மியான்மர், மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய அண்டைநாடுகளில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

இலங்கை, பங்களாதேஷ், மியான்மார் ஆகிய நாடுகளில், சீனா உட்கட்டமைப்புத் திட்டங்களில் கட்டுமானப் பணிகளில் அல்லது அதற்கான உதவிகளை வழங்குவதில் சீனா ஈடுபட்டுள்ளது என்பதை இந்திய அரசாங்கம் அறிந்தே வைத்துள்ளது.

நேபாளத்தில் நீர்மின், தகவல் தொழில்நுட்பத் திட்டங்களிலும், மாலைதீவில் தகவல்தொழில்நுட்ப மற்றும் வீடமைப்பு கட்டுமானத் திட்டங்களிலும், பாகிஸ்தானில்

(19) ஆம் பக்கம் பார்க்க

03



'அடங்காத் தமிழன்'

05



வெளியேற வேண்டும்?

# உலக தரத்தில் யாழ். பல்கலைக்கழகம் வெளிநாட்டு மாணவர்களுக்கும் அனுமதி

### உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

சர்வதேச தரத்திலான ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக சகல பீடங்களையும் கொண்டதாக யாழ். பல்கலைக்கழகம் இப்போது தரம் உயர்ந்துள்ளதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் மற்றும் விவசாய பீடங்களின் ஆரம்ப சமய நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள விவசாய பீட வளாகத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சகல பீடங்களையும், கற்கை நெறிகளையும் கொண்டதாக பேராதனைப் பல்கலைக்கழகம் விளங்கி வருகின்ற நிலையில், அதற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே விளங்குகின்றது.

இதேபோன்று குறித்த இரு பீடங்களையும் நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் தொடங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், அங்கு அவற்றுக்கான நிலப்பரப்புகள் போதுமானதாக இல்லாத நிலை காணப்படுகின்றது.

வடக்கில் கிளிநொச்சியில் அதிகமான நிலப்பரப்பை கொண்டுள்ளதாக பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமையப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## உருளைக்கிழங்கு இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கான வரி இன்று முதல் அதிகரிக்கப்பட உள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உருளைக் கிழங்கின் வரி 15 ரூபாவாக அதிகரிக்கப்படும் என அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்செய்ய அவகாசம் தேவை



### லலித் வீரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சிபார்சுகளை முழுமையாக அமுல்செய்வதற்கு மேலும் ஒரு வருடம் கால அவகாசம் தேவைப்படுவதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கமும், புனரமைப்பும் என்ற தலைப்பில் இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள பிரசார ஆவணப்படத்தை அமெரிக்காவில் திரையிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுலாகக்கடும் வேகம் நியாயமானது என தாம் வரைவிலக்கணம் செய்வதாகவும், அந்த வேகத்தை மிகச் சிறந்தது என

(19) ஆம் பக்கம் பார்க்க

## பயணிகள் போக்குவரத்து சேவை பிரச்சினைகளை தீர்க்க குழு நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்து சேவைச் சங்கத்தினருக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் குழுவொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து சேவை பிரதிநிதிகளுக்குமிடையே அமைச்சர் முன்னிலையில் நேற்றைய தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் இருதரப்பிற்குமிடையிலான கருத்து வேறுபாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து ஆகியவற்றின் சாரதிகளோ நடத்துனர்களோ

(19) ஆம் பக்கம் பார்க்க

## கமலேந்திரனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

றெக்சியன் கொலை வழக்கின் சந்தேகநபர்களான கந்தசாமி கமலேந்திரன் உட்பட மூன்று பேரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பருவமழை பொய்த்ததால் 149847 ஏக்கர் நெற்செய்கை அழிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 14,9847 ஏக்கர் நெற்செய்கை, பருவமழை சீரின்மையினால் அழிவடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எஸ். செல்வராசா நேற்றுத் தெரிவித்தார்.

2013, 2014 ஆம் பருவ காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையின் போதே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 இறுதி மற்றும் 2014 ஆரம்ப காலப் பகுதியில் பாரிய, சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும், மானாவாரி நிலப் பரப்புக்களிலும் 59,000 ஏக்கர் வரையில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. பருவகால மழையினை நம்பி மேற்கொள்ளப்பட்ட இந்த நெற்செய்கையானது, போதிய மழையின்மை

(19) ஆம் பக்கம் பார்க்க



கிளிநொச்சி அறிவியல் நகரில் நேற்று இடம்பெற்ற விவசாய பொறியியல் பீட அங்குரார்ப்பண நிகழ்வின் போது... (29)

# மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மத்தியஸ்த சபை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

மாந்தைகிழக்கு பிரதேச செயலகப்பிரிவில் முதன்முறையாக மத்தியஸ்த சபை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றாவது மத்தியஸ்த சபையாக மாந்தை கிழக்கில் மத்தியஸ்த சபை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மேடுபள்ளங்களையும், போக்குவரத்து நெருக்கடிகளையும், வறுமையையும் மீறி சிறு குற்றங்களுக்காக நீதிமன்றத்தை நாடவேண்டிய தேவை பெருமளவு குறைந்துள்ளதுடன், அப்பிரதேசத்திலே சிறு குற்றங்களுக்கு தீர்வுகாணக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

16 மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்களையும், மத்தியஸ்த சபை கைநூலையும் நீதிபதி வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி அரச அதிபர், பிருந்தாகரன் சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள், மாங்குளம், மல்லாவி பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (170)

# வளர்ச்சியடையும் நவீன உலகில் கல்வியறிவு இன்றியமையாதது

## உதயன் எம்.பி. அறிவுறுத்து



(அல்வாய்)

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் எதிர்கால சமுதாயத்தின் ஏணிப்படிகளாக விளங்கும் பாடசாலைகளின் அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்து தரப்படுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

அல்வாய் அம்பாள் வித்தியாலய விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், வளர்ச்சியடைந்து வரும் நவீன உலகில் கல்வியறிவு இன்றியமையாததாக மாறியுள்ளது. எமது பிரதேசத்தின் வளர்ச்சி எமது இளம் சமுதாயத்தினரின் கல்வியறிவின் மூலமே உச்ச நிலையினை அடைய முடியும். பின்தங்கிய பாடசாலைகளின் வசதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர் இதனூடாக மாணவர்கள் தாம் பின்தள்ளப்பட்டவர்கள் என்ற மன உளைச்சலுக்கு உட்படுகின்றனர் எனவே மாணவர்களின் கல்வியினையும் அவர்களினது எதிர்காலத்தினையும் கருத்திற்கொண்டு இவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படாத வண்ணம் அனைத்து தரப்பினரும் செயற்படுவது அவசியமாகவுள்ளது இதனடிப்படையில் இப்பாடசாலைகளின் அடிப்படை வசதிகளினை மிக விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்ததுடன், வருகின்ற விளையாட்டுப்போட்டிக்கு இப்பாடசாலையின் சொந்த பான்ட் வாத்தியக்கருவியின் பயன்பாட்டுடன் பாடசாலை விளையாட்டுப் போட்டி இடம்பெறத்தக்க வகையில் பான்ட் வாத்தியக்கருவி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் சூசைநாதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னை சாரதா சேவாச்சிரமத்தினைச்சேர்ந்த சுவாமி.சித்ரூபானந்தா, வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஈஸ்வரதேவன், வடமராட்சி ஆசிரிய ஆலோசகர் வின்சன் கோமகன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மருத்துவ ஆலோசனை கருத்தரங்கு நாளை

(அளவெட்டி)

வலிகாமம் மேற்கு இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் அனுசரணையில் வலிகாமம் மேற்கு இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.கோடனின் ஒழுங்கமைப்பில் இலவச மருத்துவ ஆலோசனைக் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 10.00 மணிக்கு வட்டு.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள ளது.

இக்கருத்தரங்கில் இந்தியாவிலிருந்து பிரபல வைத்திய ஆலோசகர்கள் கலந்து கொள்ளவிருப்பதால் மக்களை இதில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வலிகாமம் மேற்கு இளைஞர் கழகங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. (93)

**கடை வாடகைக்கு**

சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு அருகில் கடை ஒன்று வாடகைக்குண்டு (நகைக் கடை) நேரில் தொடர்பு கொள்ளவும்.

0778535599
0212240405 (R/336)

# இடிந்து விழும் நிலையில் பஸ் தரிப்பிட நிலையம்

யாழ்.பிரதான் வீதியில் மாம்பழம் சந்திக்கு சிறிது மேற்காக வேப்பங்குளத்துக்கு ஓரமாகவுள்ள பஸ் தரிப்பிடக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பஸ் தரிப்பிடக் கட்டடத்தின் கீழ் ஏ-9 வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்காக காத்திருக்கும் பயணிகள் அபாயத்துடன் நிற்கவேண்டியுள்ளதாகவும் சிலர் அதில் நிற்காது விலத்தி நிற்பதாகவும், இதனால் தாம் பல அசெளகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்குளக்கரைப் பகுதியில் நின்ற பெரிய மரம் வீதி அகலிப்புக்காஅகற்றப்பட்டதை அடுத்தே அதன் தாக்கத்தால் இக்கட்டடம் செயலிழந்ததாகத் தெரிவிக்கும் பயணிகள் இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (23)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2502 திகதி 05-02-2014

ஆங்கில எழுத்து: D

வெற்றி எண்கள்: 29 37 65 66 போனஸ் இல: 49

ஜக்பொட் பரிசு ரூ.14,284,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 254889 | 20/- | 5,097,780/- |
| 2 இல | 18189 | 100/- | 1,818,900/- |
| 3 இல | 390 | 1,000/- | 390,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9729 | 40/- | 389,160/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 664 | 1,000/- | 664,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,284,525/- | - |
| 1 இல + போனஸ் இல | 12152 | 100/- | 1,215,200/- |
| 2 இல + போனஸ் இல | 594 | 500/- | 297,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 440 | 200/- | 88,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 297084 | | 11,780,040/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.02.08 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 14,978,450/-

வளமான வாழ்வித்து

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3266)

# பாலர் ஞானோதய சபையின் 68 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 68 ஆவது ஆண்டு விழாவும், முன்னாள் தலைவர் சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்களின் 7 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமும் இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான சிவஸ்ரீ மு.சிவகடாஷ குருக்கள் இசையரங்கத்தில் சபைத் தலைவரும், ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியருமான பிரம்மஸ்ரீ சு.வரதராஜ சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை மிருதங்க விரிவுரையாளர் க.நல்லைகண்ணதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சிதம்பர திருச்செந்திநாதன் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மூன்றாம் வருட மாணவி இ.இந்துஜாவின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இதில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

# தமிழர் மறந்த 'அடங்காத் தமிழன்'!

ந.பரமேஸ்வரன்

கடந்த 2.1.2014அன்று தினமுரசு பத்திரிகையில் வடபுலத்தான் எழுதிய இரணைமடு நீர் விநியோகத் திட்டம் தொடர்பான கட்டுரையில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் தமிழரசுக் கட்சியில் இருந்ததாகவும் தமிழரசுக் கட்சியினர் சுந்தரலிங்கத்தை கட்சியிலிருந்து வெளியேற்றியதாகவும் எழுதியுள்ளார்.

சுந்தரலிங்கம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சியில் அங்கம் வகிக்கவில்லை. சுந்தரலிங்கம் தனிக்கட்சி நடத்தினார். அவரது கட்சியின் பெயர் அடங்காத் தமிழர் ஒற்றுமை முன்னணி. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கத்திற்கு சுந்தரலிங்கமும் முக்கிய பங்காற்றினார். ஜி.ஜி.பொன்னம்பலமும் செல்வநாயகமும் கைச்சாத்திடும் போது சுந்தரலிங்கம் இருவருக்கும் நடுவே நின்றவாறு இருவரும் கையொப்பமிடுவதை அவதானித்துக் கொண்டிருக்கும் புகைப்படம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெளியீடுகள் பலவற்றில் இடம்பெற்றுள்ளது.

வடபுலத்தானும் இளைய தலைமுறையினரும் தெரிந்துகொள்வதற்காக சுந்தரலிங்கம் பற்றிய முக்கிய தகவல்களை சுருக்கமாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென நினைக்கிறேன். இலங்கை சுதந்திரமடைந்தபோது நாங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றாக வாழ்வோம் என பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உறுதிமொழி வழங்கியவர்களில் சுந்தரலிங்கம் முக்கியமானவர். இதன் காரணமாக டி.எஸ். சேனநாயக்கா சுந்தரலிங்கத்திற்கு தபால், தந்தி அமைச்சர் பதவியை வழங்கினார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவையின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டார்.

சுந்தரலிங்கம் அமைச்சர் பதவியை ஏற்றதை சுட்டிக்காட்டி சுந்தரலிங்கம் தமிழர்களுக்கு துரோகமிழைத்து விட்டதாக தமிழ் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் பிரசாரம் செய்தன. ஆனால் சுந்தரலிங்கம் டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் இணைந்து கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று

சுந்தரலிங்கத்தை அரசியலில் தலையெடுக்கவிடாமல் தொடர்ச்சியாக பொன்னம்பலமும் செல்வநாயகமும் தோற்கடித்து வந்தமை.

அடுத்தது முக்கியமான காரணம். சுந்தரலிங்கம் எலிசபெத் மகாராணிக்குக் கணித பாடம் புகட்டியது பற்றி வடபுலத்தான் குறிப்பிட்டுள்ளார். எலிசபெத் மகாராணிக்கு மட்டுமல்ல சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் அரசியல் குருவும் சுந்தரலிங்கம்தான். இதனை சுந்தரலிங்கம் எழுதிய Eylom beginnings என்ற நூலின் 58ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"டி.எஸ்.சேனநாயக்காவின் தமையன் எவ்.ஆர்.சேனநாயக்கா ஒரு நாள் டி.எஸ்ஸை அழைத்துக்கொண்டு எனது இல்லத்திற்கு வந்தார். இவருக்கு கல்வியறிவு குறைாக இருக்கிறது. இவனை நீங்கள்தான் ஒரு வழிக்குக் கொண்டுவரவேண்டும் என என்னிடம் கேட்டுக்கொண்டார். நானும் டி.எஸ்ஸை ஒருமாத காலத்திற்கு காலை உணவு வேளையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டேன். சொன்னமாதிரியே டி.எஸ். தினமும் காலையில் வந்து விடுவார். நான் அவருக்கு அரசியல் சொல்லிக்கொடுப்பேன்".

இதற்கு நன்றிக்கடனாக டி.எஸ்.சேனநாயக்கா தனது ஆலோசகராக சுந்தரலிங்கத்தை நியமித்தார். இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது சுந்தரலிங்கம் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.

கந்தளாய் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டபோது காணிப்பகிர்வில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டுமென சுந்தரலிங்கம் வலியுறுத்தினார். இதன் பிரகாரம் கந்தளாய் குடியேற்றத் திட்டத்தில் தமிழர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டன. காணிகளைப் பெற்றுக்கொண்ட தமிழர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களாய் இருந்தபடியால் பின்னாளில் இவர்கள் காணிகளைச் சிங்களவருக்கு விற்று விட்டு யாழ்ப்பாணத்தில் செற்றிலாகி விட்டனர்.


C.Suntharalingam

தமிழ் ஈழக் கோரிக்கையை முதல் முதலில் முன்வைத்தவரும் சுந்தரலிங்கமே. 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதையடுத்து, சுந்தரலிங்கம் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். 1957ஆம் ஆண்டு வவுனியா தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் சுந்தரலிங்கம் அமோக வாக்குகளால் வெற்றியீட்டி நாடாளுமன்றம் சென்றார். அப்போது சமஷ்டிக் கட்சியினர் (தமிழரசுக்கட்சி) சுந்தரலிங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வில்லை. சுந்தரலிங்கம் கிளுவங்கதியால் வேலி போடப்போகிறாரா என்று கேலி செய்தனர்.

1958ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான வன்முறைகளின் போது சுந்தரலிங்கம் சிங்களவர்களைத் துரத்தியடித்தமை பற்றி வடபுலத்தானும் குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரத்திலிருந்து சிங்களவர்கள் லொறிகளில் யாழ்ப்பாணம் நோக்கி வருகிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற சுந்தரலிங்கம் தனது ஆதரவாளர்களை அழைத்து வன்னியில் இருந்த வேட்டைக்காரர்களை அழைத்து வரச்சொன்னார். இவர்களுக்கு லைசென்ஸ் துப்பாக்கிகளும், இடியன் துப்பாக்கிகளும் சுந்தரலிங்கத்தால் விநியோகிக்கப்பட்டன.

பதவியாக் காட்டிலுள்ள மரங்களில் வன்னிமைந்தர் காவலிருந்தனர். சுந்தரலிங்கம் வேட்டியை மடித்துக்கட்டியவாறு எந்தச் சிங்களவனாயிருந்தாலும் வவுனியாவைத் தாண்டிப்போவதாயிருந்தால் எனது பிணத்தின் மேலால்தான் போகவேண்டும் என்று கூறியவாறு துப்பாக்கியுடன் நின்றார் வவுனியாவில்.

அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட சிங்களவர்களில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் நாலாபக்கமும் சிதறி ஓடினர். மறுநாள் நாடாளுமன்றத்தில் சுந்தரலிங்கம் காடுகளே சுடும் (Forest will Fire) என உரையாற்றினார் (எச்சரித்தார்).

அவரை பிரதேசவாதத்தை அறிமுகம் செய்து அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தியவர்கள் தமிழரசுக்கட்சியினரே. 1965ஆம் ஆண்டு தேர்தலில் சுந்தரலிங்கத்திற்கு எதிராக சிவசிதம்பரத்தை நிறுத்தி சுந்தரலிங்கத்தைத் தோற்கடித்தனர். வன்னியானின் வாக்கு வன்னியனுக்கே அந்நியனுக்கு (யாழ்ப்பாணத்தானுக்கு) அல்ல என்று பிரதேசவாதம் பேசித் தோற்கடித்தனர். வாக்கு என்னும் பணி முடிவடைந்ததும் தோல்வியுற்றவருக்கே முதலில் உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படுவது மரபு. ஒலிவாங்கியை வாங்கிய சுந்தரலிங்கம் சொன்னார்: "தமிழரசுக் கட்சியினர் தேர்தல் பிரசாரத்தின்போது என்னை வன்னிக்குழூமாடு என வர்ணித்தனர். ஆனால் வன்னி மக்கள் தாங்கள் குழூமாடுகள் தான் என்பதை நிரூபித்து விட்டனர்...

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசப் போராட்டம் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். தான் உயர்சாதியினரின் பக்கம் நின்றால் காங்கேசன்துறைத் தொகுதியில் வெற்றியீட்டலாமென சுந்தரலிங்கம் நம்பினார். இதன் காரணமாக, "முருகன் ராத்திரி என்ரை கனவிலை வந்து சொன்னவர் உவங்களைக் கோயிலுக்கை விடப்பிடாது எண்டு" என சுந்தரலிங்கம் ஆலயவாசலில் நின்று சொன்னார். வலிகாமம் வடக்கு மக்களிடம் சாதித்திமிர் இருந்தாலும் அரசியலில் வலி வடக்கு தமிழரசுக்கட்சியின் கோட்டையென்பதை சுந்தரலிங்கம் மறந்து விட்டார்.

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தியாகராசாவிடம் தோல்வியுற்ற அமிர்தலிங்கம் 1977ஆம் ஆண்டு காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டமை இதற்கு நல்ல உதாரணம். சுந்தரலிங்கம் என்று ஒருவர் இருந்ததாகவே யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான மாணவர்களுக்குப் போதிக்கப்படுவதில்லை. அத்துடன் அண்ணாத்துரை, எம்.ஜி.ஆர், பாரதி, காந்தி போன்றவர்களுக்கெல்லாம் சிலை அமைத்த ஈழத்தமிழர்கள் சுந்தரலிங்கத்தை மறந்து விட்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆவது வவுனியாவில் சுந்தரலிங்கத்திற்கு ஒரு சிலை அமைக்கும் முயற்சியை முன்னெடுப்பாரா?

# பற்றிக்கொள்ளவும் நீள்வதற்குமான கைகள்...




இலங்கையின் சுதந்திரதினம் கடந்த பெப்ரவரி 04ஆந் திகதி கொண்டாடப்பட்டது. ஆனால் இந்த நாளை பெரும்பாலான தமிழர்கள் கொண்டாடியதாகத் தெரியவில்லை. தமிழ்ப்பகுதிகளில் பறந்துகொண்டிருந்த தேசியக்கொடிகளை ஏற்றியது, அரச உத்தியோகத்தர்களும் படையினருமே.

தமிழ் மக்கள் வழமையைப்போல இந்த ஆண்டும் சுதந்திர தினத்தை புறக்கணித்திருக்கிறார்கள் அல்லது கவனியாது விட்டிருக்கிறார்கள். அதாவது அவர்களுடைய மனதில் சுதந்திரதினம் பற்றிய பதிவுகள் இல்லை.

இலங்கையர்களாக தங்களை உணராதவரை இலங்கையின் பொது நிகழ்ச்சிகள் எதுவும் தமிழ் மக்களின் உணர்வில் பிரதிபலிக்காது.

ஏறக்குறைய இது இலங்கையின் நிலைமைகளில் எந்த மாற்றங்களையும் உண்டாக்கவில்லை என்பதன் அடையாளமே. ஆகவே இதை நாம் கூடிய கவனத்திற்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் வேறாகவும் சிங்களவர் வேறாகவும் சிந்திக்கின்ற – செயற்படுகின்ற நிலையே தொடர்ந்தும் காணப்படுகிறது. தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கையின் அடையாளங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகவே தங்களைக் கருதிக்கொள்கிறார்கள்.

அரசாங்கத்தின் மீதான திருப்தியின்மைகளும், கோபங்களும் இலங்கை மீதான கோபமாகவும், நம்பிக்கையீனமாகவும் தமிழர்களின் மனதில் உருவாகியுள்ளது.

இது சரியானதா? அல்லது இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டுமா? அல்லது தமிழர்கள் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு இதுதான் பொருத்தமான வழிமுறையா?

சுதந்திர தினத்தை அனைவரும் கொண்டாடக்கூடியவாறு அனைத்து சமூகங்களிடமும் உணர்வை ஏற்படுத்தும் பொறுப்பு இலங்கையில் இன்னும் உணரப்படவில்லை. இதன் விளைவே இந்த மாறுபாடுகள்.

உண்மையில் இலங்கையின் பின்னடைவிற்கும் அமைதியற்ற நிலைக்கும் இந்த நிலைமையே காரணம்.

இதை உணராமல், இதனை ஏற்றுக்கொள்ளாமல் ஒவ்வொரு தரப்பும் பிளவுண்டு, எதிர்க்கோணங்களில் நிற்கின்றன.

ஒரு கொடியின்கீழ் நிற்கக்கூடிய தேவையைப்பற்றி யாரும் உணரத் தயாராக இல்லை. ஒரு கொடியின்கீழ் நிற்கும்போது இலங்கை பெறுகின்ற நன்மைகளையும், சிறப்புகளையும் பற்றி எவரும் உணரவுமில்லை.

ஒருதரப்பு சுதந்திரதினத்தை, போர்வெற்றியை எல்லாம் வெகுசிறப்பாக கொண்டாடுகிறது. இன்னொருதரப்பு இதையெல்லாம் புறக்கணிக்கிறது.

கொண்டாடுவோர் புறக்கணிப்போரை பகையாக பார்க்கிறார்கள். புறக்கணிப்போர் கொண்டாடுவோரை எதிராக நோக்குகின்றனர்.

எதிர் எதிர் துருவங்களாகவே இலங்கைச் சமூகங்கள் தொடர்ந்தும் இருக்கின்றன.

இந்த எதிர்நிலைகளை நீக்கி, ஒருங்கிணைந்த உறவுநிலைக்கு கொண்டுவரும் பொறுப்பு யாருடையது? அதை எட்டுவது எவ்வாறு?

எவரையும் ஒதுக்கிவைத்துவிட்டு நாம் மட்டும் கொண்டாடுவோம், மகிழ்ந்திருப்போம் என்று எண்ணுவது சரியானதல்ல. அது நீதியானதும் அல்ல.

அதேபோல இந்தக் கொண்டாட்டங்களில் நமக்கு பங்கில்லை. நமக்கும் இவற்றுக்கும் தொடர்பில்லை என்ற மாதிரி ஒதுங்கியிருப்பதும் பொருத்தமானதல்ல. இது ஒருபோதும் நன்மைகளை ஈட்டுத்தரப்போவது அல்ல.

அப்படியென்றால் எப்படி இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது? இந்த நிலைமைகளை எவ்வாறு சீர்ப்படுத்துவது?

இங்கேயும் பந்து அரசாங்கத்தின் காலிலும், சிங்களத்தரப்பின் கைகளிலும்தான் உள்ளது.

காயங்களாலும், வலிகளாலும், நம்பிக்கையீனங்களாலும் வரலாற்றைக் கொண்டுள்ள எவரும் உடனடியாக மாற்றங்களுக்கு உட்பட்டு விடமாட்டார். அவர்களை உளவியல் ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஆற்றுப்படுத்தி நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியது அரசின் பொறுப்பாகும். சிங்கள மக்களின் கடப்பாடாகும்.

அதேவேளை இதில் ஒருகை மட்டும் ஓசைஎழுப்ப முடியாது. இரண்டு கைகளும் சேர்ந்தே எதையும் சிறப்பாக செய்ய முடியும்.

அதனால் பற்றிக்கொள்வதற்கு தயாராக இருந்தாலும் நீள்வதற்கான கையும் தயாரர்க இருக்க வேண்டும்.

இந்தக் கைகள் ஒவ்வொரு தரப்பின் மனதிலிருந்துமே நீள வேண்டும். அதுதான் சாத்தியமானது. அப்படி நீளும் கைகள் தான் தேசியக் கொடியையும் ஏற்றும். வெற்றிக்கொடிகளையும் ஏந்தும். மட்டுமல்ல ஒரு கொடியின்கீழ் – ஒரே கொடியின்கீழ் அணிவகுத்து நிற்கும்.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்னமாதிரியான தலைவர்கள்!

“அவுஸ்ரேலியப் படகுப் பயணம் பிழைச்சாப் பிறகு இப்ப பத்திரிகையாளர் எண்டு எங்கையாவது சேர்ட்டிபிகேற் எடுத்துக்கொள்ளுறதுதான் வெளிநாட்டுக்குப் பறக்கிறதுக்கான வழி எண்டு இளைஞர்களிடம் கதை அடிபடுகுது” என்றார் அலுவலகம் வந்திருந்த நண்பர்.

எப்படியாவது ஒரு பத்திரிகையாளராகச் சேர்ந்து கொண்டு, ஏதாவது இடக்கு முடக்காகப் பண்ணி மிரட்டலுக்கு ஆளானதாகப் பத்திரிகையில், அதாவது குறிப்பிட்ட “பத்திரிகையாளருக்கு அச்சுறுத்தல்” என்று படத்தோடு செய்தியும் வெளிவரப் பண்ணியிட்டால், சுவிஸ் வீசா உடன கிடைக்குதாம்” என்றும் மேலும் அவர் சொன்னார்.

உண்மைதானா என்று உறுதியாகத் தெரியாவிட்டாலும் கணிசமான நமது இளைஞர்கள் எப்படியாவது இங்கிருந்து வெளியேறிவிடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்; அதுவே அவர்களது விருப்பமாகவும் இருக்கிறது என்பது மகிழ்ச்சி தரும் தகவலாக இல்லை.

தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டை விட்டு ஓடுவதையே இப்போதும் விரும்பிக் கொண்டிருப்பதற்கு, அரசாங்கமும் தமிழ் அரசியல்வாதிகளும்தான் பொறுப்புச் சொல்ல வேண்டும். இவர்களது அரசியல் செயல்பாடுகள், இளைஞர்களுக்கு இங்கு வாழும் நம்பிக்கையை அளிக்கத் தவறியிருக்கிறது என்பதே இதன் பொருள்.

தமிழ் இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அரசாங்கம்தான் காரணம் என்றால், அதைத் தடுப்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் என்னமாதிரியான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். தமிழ் இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டியது அரசாங்கம் மட்டும்தானா, தமிழ் தலைவர்களுக்கு அந்தப் பொறுப்பில்லையா?

போர் ஓய்ந்த பிறகும் இளைஞர்கள் வெளியேற்றம் என்பது, ஏற்கனவே பெருமளவு இளைஞர் சக்தியை யுத்தத்தில் பறிகொடுத்த சமூகத்திற்கு மேலும் மனிதவள இழப்பல்லவா? இந்த வெளியேறும் விருப்பத்திற்கான உளவியல் காரணங்களை கண்டறிய வேண்டியதும், அதைத் தடுப்பதற்குரிய திட்டமிடல்களைச் செய்ய வேண்டியதும், இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டியதும் தமிழ்த் தலைமையின் கடமை அல்லவா!

அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு, நமது வளங்களை மேலும் மேலும் தொலைத்துக் கொண்டிருப்பதைக் கையறுநிலையில் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவா மக்கள் தங்களது தலைமையைத் தேர்ந்தெடுக்கிறார்கள்?

தலைவர்கள் என்போர் தங்கள் பிள்ளைகளை குடும்பத்தை வெளிநாடுகளில் வாழவைத்துவிட்டு இங்கு வெறும் உணர்ச்சித் தினவுக்காக அரசியல் செய்துகொண்டிருப்பதனாலா இளைஞர்களின் வெளியேற்றத்தையும் கண்டுகொள்ளாமலிருக்கிறார்கள்?

இவர்களது அரச எதிர்ப்பு முழக்கங்கள்தான் இளைஞர்களையும் விரக்தியடைய வைத்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறது என்பதுதானே உண்மை? அரசுடன் பேசித் தீர்வுகாணக்கூடிய விஷயம் எதுவுமில்லை என்பதையே தொடர்ந்தும் தலைவர்கள் சொல்லிக்கொண்டிருந்தால் மக்கள் நம்பிக்கையை எங்கிருந்து பெறுவது?

மக்களை விரக்தி நிலையில் வைத்திருப்பதன் மூலம் தங்களது அரசியல் லாபத்தை மட்டும் பெற்றுக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளைத் தலைவர்களாய்க் கொண்ட சமூகம் எப்படி உருப்படும்?

இதற்கிடையில், ஜெனிவா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்கத் தான் போகப் போவதில்லை என்று மாகாணசபை உறுப்பினர் அனந்தி தெரிவித்துள்ளார். தமது உயிருக்கோ பாதுகாப்புக்கோ உத்தரவாதம் இல்லை என்றும், தனது இரண்டு குழந்தைகளை வளர்ப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தமக்கு கடும் அச்சுறுத்தல் இருப்பதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில்தானே அமெரிக்காவெல்லாம் போய்ச் சுற்றிவிட்டு வந்தார், என்ன அச்சுறுத்தல்? குடும்பத்தினரை வெளிநாட்டில் குடியேற்றுவதற்கான பேச்சாகத்தானே தெரிகிறது! இங்கு வாழ விரும்பும் மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டிய இந்தத் தலைவர்களின் லட்சணம் இப்படித்தான் இருக்கிறது! - ஆசிரியர்.

# மேல்மாகாணத் தேர்தலில் வென்று பலம்வாய்ந்த கட்சியாக மாறுவோம்

## என்கிறார் மனோ கணேசன்

(கொழும்பு)

தேர்தல்களில் வெற்றி பெற்று பலம்வாய்ந்த கட்சியாக உருவெடுப்போம் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று, கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டு ஊடகவியலாள்ர்களிடம் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறுகையில், கொழும்பில் தமிழ் பேசும் மக்கள் துன்பப்பட்ட போது விழித்திருந்து நாம் மக்களுக்காக போராடினோம். அந்தப் போராட்டம் இன்றும் சுறுசுறுப்பாக தொடர் கிறது. நாம் மக்களுடன் இருந்தபோதும், இருக்கும்போதும் எப்போதும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவர்களுக்கும், துன்பம் விளைவித்த கூடாரத்தை சேர்ந்தவர்களுக்கும் மனச்சாட்சியுள்ள மக்களால் ஒரு போதும் வாக்களிக்க முடியாது. ஆகவே எதிர்வரும் தேர்தலில், நமது ஜனநாயக மக்கள் முன்னணி மென்மேலும் பலம்வாய்ந்த ஒரு கட்சியாக வெற்றி பெறுவது உறுதியாகும்.

இன்று நாம் கொழும்பில் நமது மக்களின்அதிகூடிய வாக்குகளை பெற்றுள்ள கட்சியாகும். எமது இந்தப் பலம் எதிர்வரும் தேர்தலில் இன்னமும் அதிகரிக்கும். இதன்மூலம் இந்நாட்டிலே ஆளுகின்ற அரசையும், எதிர்க்கட்சிகளையும் நாம் எம்மை திரும்பி பார்க்க வைப்போம். நாங்கள் இங்கே அரசியல்ரீதியாக பலம் பெறாவிட்டால் இங்கே எவரும் எங்களை மதிக்கப் போவது இல்லை.

இது தமிழ் பேசும் மக்களுக்கு இன்று மிக நன்றாகத் தெரியும். மேல்மாகாணத்திலே, குறிப்பாக கொழும்பிலே ஜனநாயக மக்கள் முன்னணி மென்மேலும் வாக்குகளைப் பெற்று பலம் வாய்ந்த ஒரு கட்சியாக உருவாக வேண்டும் என வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் வாழும் மக்களும் பெரிதும் விரும்புகிறார்கள்.

அங்கு வாழும் எங்கள் உறவுக்கார மக்களின் இந்த விருப்புகளுக்கு இணங்க அந்த மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் உரிய வேளையில் எமக்கான ஆதரவுகளை வழங்கும் என நான் நம்புகிறேன். எம்மை அழித்துவிட களம் இறக்கப்பட்டிருப்பவர்கள், யார் என்பதும், அவர்கள் இன்று என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்றும் தலைநகர மக்களுக்கு நன்கு தெரியும். இந்த மனச்சாட்சியுள்ள மக்களை நம்பியே நான் களம் இறங்கியுள்ளேன். எங்கள் கொழும்பு மாவட்ட பட்டியலில் படித்த பட்டதாரிகள், மருத்துவ, ஆசிரிய, ஆன்மீக துறைகளை சார்ந்தவர்கள், இளைஞர்கள், பெண்கள் என்று பலதரப்புகளை சேர்ந்தவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தமிழர்களுடன், சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்துக்கள், கத்தோலிக்கர்கள் இடம் பெறுகிறார்கள்.

முதல் முறையாக நமது பட்டியலில் ஐந்து பெண்கள் முன்னணி வேட்பாளர்களாக களம் இறங்கியுள்ளார்கள். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள எமது தேர்தல் பிரசாரம் எதிர்வரும் நாட்களில் சூடு பிடிக்கும் போதும் இன்னமும் பல விடயங்கள் களத்துக்கு வரும் என்றார்.

# ஐக்கிய தேசியக்கட்சியை கண்டிக்கும் சுதந்திர முன்னணி

(கொழும்பு)

இலங்கை இராணுவம் தொடர்பில் உள்ளக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியிருந்தமைக்கு, தேசிய சுதந்திர முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, இலங்கை இராணுவம் தொடர்பில் உள்ளக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

1989ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளைத் தொடர்ந்து அந்தக் காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் விசாரணை நடத்தி இருந்தது.

ஆனால் தற்போது ஏன் அரசாங்கம் தம்மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை நடத்த மறுத்து வருகிறது என்று அவர் கேள்வி எழுப்பி இருந்தார். இந்த நிலையில் இந்தக் கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுபினர் எம்.முஸம்மில், இந்தக் கருத்து அமெரிக்காவின் தேவைக்கு அமைய வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களுக்கு மதிப்பளித்தே தெற்கு அரசியல்வாதிகள் செயலாற்றுகின்றனர்

## கூறுகிறார் அமைச்சர் விமல்வீரவன்ச

(கொழும்பு)

தெற்கு அரசியல்வாதிகள் தமிழ்மக்களை எப்போதும் மதித்தே வந்துள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு அரசியல்வாதிகளுக்கு முஸ்லிம்கள், சிங்களவர்கள் தேவையில்லை என்றபோதிலும் தெற்கு அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் தேவையில்லாமல் போகவில்லை என்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ச. வடக்கில் சிங்கள, முஸ்லிம் மக்களை மீள் குடியேற்றக் கூடாது என அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும், வடமாகாணசபையும் கோரி வருகின்றது.

எனினும், 1983ஆம் ஆண்டு கறுப்பு யூலையின் பின்னர் மேல், தென் மாகாணங்களில் தமிழர்களை மீள்குடியேற்ற வேண்டாம் என சிங்கள அரசியல்வாதிகள் கோரியதில்லை. 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற வன்முறைகளில் கொழும்பைச் சேர்ந்த தமிழர்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற நேரிட்டது.

எனினும், 1983ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் இருந்த அளவு தமிழ் மக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென எந்தவொரு சிங்கள அரசியல்வாதியும் வலியுறுத்தியதில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும், வடமாகாணசபையும் வடக்கில் சிங்கள மக்களை குடியேற்றக் கூடாது எனக் கோரி வருகின்றனர். சில தமிழ் ஊடகங்கள் தொடர்ச்சியாக பிரிவினைவாத கோட்பாடுகளை பிரசாரம் செய்து வருகின்றன. நாட்டில் சமாதானம் ஏற்படுவதனை விரும்பாத சக்திகள் தொடர்ச்சியாக பிரிவினைவாதத்தை தூண்டி வருகின்றனர் என்றார்.

# அவுஸ்ரேலியாவிலிருந்து 54 பேர் நாடு கடத்தல்

படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற நிலையில், அந்நாட்டு அரசாங்கத்தால் கிறிஸ்மஸ் தீவிலுள்ள திறந்தவெளி சிறைச்சாலைகளில் தடுத்து வைகக்கப்பட்டிருந்த இலங்கையர்களில் 54 பேர் நேற்று நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு வருட காலமாக குறித்த சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 54 பேரே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தனிப்பட்ட விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.



**தமிழர் ஒரு தேசிய இனம்! சுயநிர்ணய உரிமைக்குரிய முழு அந்தஸ்தும் உள்ள இனம்! மறுப்பதற்கில்லை! பிரிந்துபோவது கூட தமிழர்களின் அடிப்படை உரிமை! ஆனால் இங்கு பார்க்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் தமிழ்த் தேசியம், தமிழர்களின் உரிமையை ஒரு ஜனநாயக உரிமையாகப் பார்க்கவில்லை என்பதைத்தான்! ஒரு பிரிவினைவாத உரிமையாகத்தான் பார்க்கிறது! தங்களை மற்ற இனங்களோடு எவ்வளவுக்கு பிளவுபடுத்திப் பார்க்க முடியுமோ அவ்வளவுக்கு பிளவுபடுத்திப் பார்க்கிறது! தமிழ் இனத்தின் சமூக உளவியலே அத்தகையதுதான்!**

# இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்? ஓர் உரையாடல்... 2

**யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து**

**யோகா:** பொதுவாக தேசியத்தை முற்போக்கு, பிற்போக்கு என்ற இரு கூறுகளாகப் பார்க்கின்ற போக்கு ஒன்று சில புரட்சிகர சக்திகளிடம் இன்றும் இருக்கின்றது! தமிழ்த் தேசியம் இதுவரை காலமும் பிற்போக்குவாதிகளின் கையில் சிக்கியதால்தான் அது தோல்வியடைந்தது என்றும், இனிமேலாவது முற்போக்கு சக்திகள் அதை முன்னெடுப்பதற்கான வழிகளில் செயற்படவேண்டும் என்றும் ஒரு கருத்து நிகழ்கிறது! தமிழ்த்தேசியத்தை மீண்டும் முன்னெடுக்க முற்படும் முற்போக்கு புரட்சிகர சக்திகளின் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தின் இருப்பு தடையாக அமையும் என்பதை நீங்கள் யோசிக்கவில்லையா?

**ராஜன்:** தமிழர் ஒரு தேசிய இனம்! சுயநிர்ணய உரிமைக்குரிய முழு அந்தஸ்தும் உள்ள இனம்! மறுப்பதற்கில்லை! பிரிந்துபோவது கூட தமிழர்களின் அடிப்படை உரிமை! ஆனால் இங்கு பார்க்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் தமிழ்த் தேசியம், தமிழர்களின் உரிமையை ஒரு ஜனநாயக உரிமையாகப் பார்க்கவில்லை என்பதைத்தான்! ஒரு பிரிவினைவாத உரிமையாகத்தான் பார்க்கிறது! தங்களை மற்ற இனங்களோடு எவ்வளவுக்கு பிளவுபடுத்திப் பார்க்க முடியுமோ அவ்வளவுக்கு பிளவுபடுத்திப் பார்க்கிறது! தமிழ் இனத்தின் சமூக உளவியலே அத்தகையதுதான்! சாதி, சாதிக்குள் சாதி, சமயம், பிரதேசம், தீவு, ஊர், குடும்பம், என்று பல்வகை அடிப்படைகளில் தன்னைப் பிரித்துப் பார்ப்பதில் மனநிறைவு பெறுகின்ற சமூகமாகவே தமிழ்ச் சமூகம் இருந்து வருகிறது!

அந்தவகையில் இராணுவ இருப்பைக் கூட ஒரு வேற்று இன ராணுவம் இருப்பதாகப் பார்க்கிறதே ஒழிய, தமது பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக பார்க்கத் தயாரில்லை. புலிகள் இருந்த காலத்தில் ஒருபோராளியைச் சார்ந்து அப்போராளியின் குடும்ப அங்கத்தவர்களுடன் மாமன், சித்தப்பன் (குறைந்தது 5நபர்) என்று குடும்பம் முழுமைக்கும் பயந்து வாழ வேண்டியிருந்தது! ஒரே மொழியைப் பேசுவதால் இரகசியம் கூட பேசமுடியாத அவலம்! புலிகளின் எண்ணிக்கை சுமார் ஐம்பதாயிரம் என்று எடுத்துக் கொண்டால் குறைந்தது இரண்டரை லட்சம் தமிழருக்கு நடுங்கி வாழ வேண்டிய சூழல் இருந்தது! ஆனால் ராணுவச் சிப்பாயைப் பொறுத்தவரை அவனொருவனுக்கு மட்டும்தான் பயப்படவேண்டும்! அவனது குடும்பமும் குடும்ப அங்கத்தவர்களும் எங்கேயோ ஒரு தூரத்தில்!

உண்மையில் எது ராணுவச் சமூகம்? புலிகளின் காலத்தில் தமிழ் பிரதேசங்கள் முழுமையும் ராணுவ சமூகத்தால் சூழப்பட்டிருந்ததே உண்மை!

புலிகளின் காலத்திலும் பார்க்க இன்றைக்கு ஒரு குறைந்தளவுக்காவது ஜனநாயகச் சூழல் உண்டு! ராணுவ முகாமை அண்மித்து வாழ்கின்ற மக்கள் பலர் பெண்கள் உட்பட தாம் தமிழர் கூட்டமைப்புக்குத்தான் வாக்களிக்கப்போகின்றோம் என்று துணிச்சலுடன்கூறியதையும்,சிறீதரன், அனந்தி, கஜேந்திரன் ஆகியோரின் தீவிரப் பேச்சுக்களும் இதற்கு தகுந்த சான்றுகள் ஆகும்! இன்னும் சொல்லப் போனால், இவர்களதும் (சிறீதரன், அனந்தி, கஜேந்திரன்), முதலமைச்சர் விக்கினேஸ்வரனதும் அடிப்படைப் பாதுகாப்பும் கூட ராணுவத்தில்தான் தங்கியிருக்கிறது!

**யோகா:** ராஜன்... பழைய போராளிகளிடம் சென்று பணம் பறிக்கும் நோக்கில் அவர்களை விரட்டி வருகின்ற போக்கு கீழ்நிலை ராணுவத்திடம் இன்றும் இருந்துகொண்டிருக்கு! இதனால் மேலதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய முடியாமலும்,வெளிநாடுகளுக்கு செல்லமுடியாமலும் அவதிப்படுகின்ற சிலரை நான் நேரில் பார்த்திருக்கிறேன்! ராணுவம் நிலைத்திருப்பதனால் அப் போராளிகள் மீதான இத் தொல்லை தொடர் தொல்லையாகவே நீடிப்பதற்கு வாய்ப்புண்டு. இத்தகைய தொல்லைகளில் இருந்து அவர்கள் மீள்வது எங்ஙனம்?

**ராஜன்:** மாஸ்ரர்...! நீங்கள் கூறுகின்ற விதமான இவ் ராணுவத்தின் செயற்பாடுகளுக்கான சாத்தியங்கள் இருக்கத்தான் செய்கின்றன! ஊழல் படிஞ்ச இச் சமூகத்தில் இப்படிப் பலவீனமான பல விசயங்கள் சாத்தியம்தான்! இத்தகைய போக்குகள் குறித்து, அரசியல் வாதிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்து அதை அரச மட்டத்திலும் ராணுவ உயர் அதிகாரிகளிடம் பேசுவதன் மூலம் ஒரு முடிவுக்குக் கொண்டுவர முனைய வேண்டும். பதிலாக இதையும் ராணுவ வெளியேற்றத்துடன் சேர்த்துக் குழப்புவதில் அர்த்தமில்லை! தமிழ் காவல்துறைகள் இருந்தால் கூட இதே ஊழல்கள் இருக்கத்தான் செய்யும்! இன்னும் மேல போய் சாதிய ரீதியாகவும் அணுகுவர்! இது ஊழல் சம்பந்தப்பட்ட பிரச்சினை. என்.ஜி.ஓ. க்கள் கூட ஊழல் செய்யும் காலம் இது!

இந்நாட்டில் ஏழைகள் மீது எளிதில் சவாரி செய்யக்கூடிய முறையில் தான் சகல அதிகாரங்களும் அமைந்துள்ளன! அதற்கு ராணுவ வெளியேற்றம் தீர்வாகாது! எனது கவனம் எல்லாம் தமிழ்ப்பகுதிகளில் மீண்டும் ஒரு வன்முறை நிகழ்வு இடம்பெறாமல் இருப்பதற்குரிய எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியதே!

**யோகா:** ஏற்கனவே "இன அழிப்பைச் செய்தவர்கள்" என்ற பழிச்சொல்லுக்கு உட்பட்டிருக்கும் இலங்கை ராணுவத்தை தமிழரின் பாதுகாப்புக் கருதி தொடர்ந்து நிலைபெறச் செய்வதில் நியாயம் இருக்க முடியுமா?

**ராஜன்:** மாஸ்ரர்... இது ஒரு அருமையான கருத்து? இது ஒரு பெரிய விசயமும் கூட! உண்மையில் இது பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில்தான் உரையாடவேண்டும். ஏனெனில், இலங்கை அரசோ அல்லது ராணுவமோ இன அழிப்பைச் செய்ததா என்பது பற்றி சர்வதேச மட்டத்தில் பேசப்படவேண்டிய விவாதத்துக்குரிய விடயம் இது!. அதைத் தாண்டி கிட்லர் மூலம் யூதர்கள் அழிக்கப்பட்டதை தெளிவான முறையில் இனப்படுகொலையாக உலகம் ஏற்றுக் கொள்கிறது! ஆனால் இன்னும் பல இனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படுகொலை நடவடிக்கைகள் பல சர்வதேச நியமங்களுக்குட்பட்ட வகையில் இனப்படுகொலைகளாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை! உதாரணமாக ஆர்மேனிய மக்கள் மீதான படுகொலைகள் பற்றி சர்வதேச மட்டத்தில் இன்னும் குழப்பமான நிலைதான் உண்டு! ஆர்மேனிய மக்களின் கொலையை இதுவரை 20 நாடுகள் மட்டும்தான் இனப்படுகொலையாக அங்கீகரித்திருக்கிறது! இந்நிலையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற அளவுக்கு உயர்த்துவதை எப்படிப் பார்ப்பது என்பது பற்றி வேறொரு விவாதத்தில் கதைப்பதுதான் நல்லது! இதே சந்தர்ப்பத்தில், நீதிபதியாக இருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் "இனப்படுகொலை என்று குறிப்பிடாதீர்கள், இனப்படுகொலைக்கு ஒப்பானது என்று கூறும்படி" தமது மாகாணசபை உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டமையை இங்கு உற்று நோக்குவது சிறப்பு!

இனப்படுகொலை, கறுப்பு யூலை, ஆண்ட பரம்பரை எண்டு பேனைப் பெருமாள் ஆக்குகிற, யதார்த்தத்துக்குப் புறம்பான தமிழரின் மிகைப்படுத்தல்கள் சர்வதேச அளவில் பெரிய அங்கீகாரத்தைப் பெறமாட்டாது என்பதே உண்மை!

இதன் அர்த்தம் இலங்கை ராணுவம் சைவத்தை மட்டும்தான் புசிக்கும் என்பதல்ல! ராணுவம் எண்டால் எப்படி இருக்கும் என்ற யதார்த்தம் புரியப்பட்ட ஒன்றுதான்! ஒரே இனத்தைச் சேர்ந்த ரெலோ போராளிகளை திண்ணைவேலிச் சந்தியில் வைத்து ரயர்போட்டுக் கொளுத்தியதை செய்தது புலி ராணுவம்! ஜே.வி.பி. போராளிகளை தயவுதாட்சண்யம் இன்றி அழித்தொழித்தது சிறீலங்கா ராணுவம்! ஒரு துப்பாக்கியும் ராணுவமும் ஒன்றுதான் அதன் செயற்பாட்டளவில்!

(தொடரும்)

**இனப்படுகொலை, கறுப்பு யூலை, ஆண்ட பரம்பரை எண்டு பேனைப் பெருமாள் ஆக்குகிற, யதார்த்தத்துக்குப் புறம்பான தமிழரின் மிகைப்படுத்தல்கள் சர்வதேச அளவில் பெரிய அங்கீகாரத்தைப் பெறமாட்டாது என்பதே உண்மை! இதன் அர்த்தம் இலங்கை ராணுவம் சைவத்தை மட்டும்தான் புசிக்கும் என்பதல்ல! ராணுவம் எண்டால் எப்படி இருக்கும் என்ற யதார்த்தம் புரியப்பட்ட ஒன்றுதான்! ஒரே இனத்தைச் சேர்ந்த ரெலோ போராளிகளை திண்ணை வேலிச் சந்தியில் வைத்து ரயர்போட்டுக் கொளுத்தியதை செய்தது புலி ராணுவம்! ஜே.வி.பி. போராளிகளை தயவுதாட்சண்யம் இன்றி அழித்தொழித்தது சிறீலங்கா ராணுவம்! ஒரு துப்பாக்கியும் ராணுவமும் ஒன்றுதான் அதன் செயற்பாட்டளவில்!**

# விபசார விடுதிகள் முற்றுகை 26 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் மருதானை, தொழில்நுட்ப சந்தி மற்றும் பஞ்சிகாவத்தை ஆகிய பகுதிகளில் நடாத்தப்பட்ட விபசார விடுதிகளை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த பொலிஸார் அந்த விடுதிகளின் முகாமையாளர்கள் ஐவர் உட்பட 26 விபசாரிகளை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மருதானை, வஜிரானந்த மாவத்தையில் விபசார விடுதியை நடாத்தியதாக கூறப்படும் முகாமையாளர்கள் இருவரையும் அங்கு விபசாரத் தில் ஈடுபட்டதாக கூறப்படும் பெண்கள் 8 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 8 பேரும் 21 வயதிற்கும் 31 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும், தெவிநுவர, ரக்வானை, ஹட்டன், அவிசாவளை,கந்த பொலகல் முனை, ரத்மலானை, வறக்காபொல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொழில்நுட்ப சந்திப் பகுதியில் விபசார விடுதியை நடாத்திச்சென்றதாக கூறப்படும் களனி மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்த முகாமையாளர்கள் இருவரையும் அங்கு விபசாரத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் பெண்கள் 13 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 13 பேரும் 26 வயதிற்கும் 48 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் களுபோவில, கடுவல, மதவாச்சி, மருதானை, நுவரெலிய, வாழைத்தோட்டம், தலவாக்கலை, பொரளை, வட்டகொடை, மினுவாங்கொடை,இரத்மலானை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மருதானை, பஞ்சிகாவத்தையில் விபசார விடுதியை நடாத்திச்சென்றதாக கூறப்படும் தலவாக்கலையைச் சேர்ந்த முகாமையாளரையும் அங்கிருந்த 5 பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள், நுவரெலியா, கிராண்பாஸ், பேலியகொடை, அவிசாவளை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேர்தல் வன்முறைகள் 52

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலுடன் தொடர்புடைய 52 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரச வாகனங்களை தேர்தல நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய 6 சம்பவங்களும், அரசாங்க உத்தியோகத்தர்களை பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய 3 சம்பவங்களும், இவற்றுள அடங்குவதாக தேர்தல் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் விசேட பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான 20 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் அதிகபட்சமாக 13 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் 7 முறைப்பாடுகளும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்க ளில் தலா மூன்று முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

# அரசாங்கத்திற்கு எதிராக பிரிவினைவாதிகள் ஒன்றிணைவு

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் தெரிவிப்பு



அரசாங்கத்திற்கு எதிராக பிரிவினைவாதிகள் இணைந்துள்ளனர் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை இன்று 66 ஆவது சுதந்திர தினத்தினை அடைந்துள்ளது . ஆயினும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா பேரவையின் தீர்மானத்தின் பின்னர் இலங்கையின் சுதந்திரம் மேலைத் தேய நாடுகளின் மூலம் பறிக்கப்படுவது உறுதியாகும் இன்று இலங்கையில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாகவும் , நிம்மதியாகவும் வாழ்ந்து வருகின்றனர் . இதனை சீர்குலைக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் , சர்வதேச அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தின் அபிவிருத்திகளையும்,மக்களின் பாதுகாப்பினையும் அரசாங்கமே பெற்றுக்கொடுத்துள்ளது . அதனை கூட்டமைப்பும்,வடமாகாண முதலமைச்சரும் மறந்து விட்டு தேசத் துரோக செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் . அனைவரும் அரசாங்கத்திற்கு எதிராக தமது சூழ்ச்சிகளை சரியாகச் செய்து கொண்டிருக்கின்றனர் . இதனை அரசாங்கம் தொடர்ந்தும் விட்டு வைக்குமாயின் குறுகிய காலத்திற்குள் நாடு அழிந்து விடும் .

இன்று அரசாங்கத்திற்கு எதிராக அனைத்து பிரிவினைவாத கட்சிகளும் , அமைப்புகளும் , மதத் தலைவர்களும் இணைந்து விட்டனர்.குறிப்பாக மன்னார் ஆயர் மிகவும் மோசமான தேசத துரோக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார் . நாட்டிற்கு எதிராக செயற்படும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பை அரசாங்கம் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் .

அதேபோல் பிரிவினைவாதத்தினை தொடர்ந்தும் நாட்டில் வலியுறுத்திக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரை உடனடியாக தடை செய்து கூட்டமைப்பு மீதான சட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் . இலங்கை விடயத்தில் தொடர்ந்தும் சர்வதேசத்தின் தலையீடுகளை எதிர்பார்த்து அச்சப்பட்டு செயற்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

சிங்களமக்களின் நலன்களை யாவது ஜனாதிபதி கருத்திற் கொள்ள வேண்டும் . இல்லையேல் மேலைத்தேய சக்திகள் இலங்கையையும் அடிமை நாடாக மாற்றி தமது காரியங்களை இலகுவில் செய்து கொளவார்கள் எனவும் அவர் தெரிவித்தார் என்றார்.

# சனல்4 இற்கு எதிராக வழக்குத் தாக்கல் இல்லை

## அரசாங்கம் தீர்மானம்

இலங்கை பற்றி வீடியோக்களை ஒளிபரப்பியமைக்காக இலங்கை அரசாங்கம் சனல்-4இற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதில்லையென தீர்மானித்துள்ளது எனவும் இவ்வாறான நிலைமைகளை கையாள கூடுதல் வினைத்திறன் மிக்க தந்திரோபாயங்களை கைக்கொண்டுள்ளதே இதற்கான காரணமெனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பான சனல்-4 ஆவணப்படத்தை தயாரித்த கெலும் மக்ரேயுடன் பேசிய போதே உடன்பாடு கண்ட பொய்கள் எனும் வீடியோக்கள் திரையிடப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

பி.பி.சி, அல்ஜஸீரா மற்றும் “ஹாட்ரோக்” நிகழ்ச்சி பொறுப்பாளர்களுக்கு இவையாவும் நாம் என்ன நினைக்கின்றோம் என்பதை மிகத்தெளிவாக கூறியுள்ளது என அமைச்சர் கூறினார்.

# தமிழர்களை உயிருடன் காப்பாற்றிய 25 வீத படையினர் உயிருடன் இல்லை

## பிரதியமைச்சர் சரத்வீரசேகர கவலை

(கொழும்பு)

தமிழ் மக்களை உயிருடன் காப்பாற்றிய 25 வீத படையினரை இழந்து விட்டோம் என பிரதி அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்தார் .

அம்பாறை மாவட்ட தமிழர் அபிவிருத்தி வாழ் உரிமை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி காணி தொடர்பாக தமிழ் புத்திஜீவிகள் பிரதி அமைச்சரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னை அழிப்பதற்கு எனது கடற்படைக் கப்பலை தாக்குவதற்காக பிரபாகரன் 1990 ஆண்டு யூலை 5 ஆம் திகதி 3 தற்கொலை குண்டுதாரிகளையும் படகுகளையும் அனுப்பிவைத்தார் தற்கொலை படகு வெடித்ததில் என்னுடன் பால்சோறு உண்ட 5 கடற்படை வீரர்கள் உயிரிழந்ததுடன் வெடிப்பில் ஏற்பட்ட வெப்பமே அதிகமாக இருந்தது

கடலில் யுத்தம் செய்யும் போது கடற புலிகள் 3 பேர் இறந்து விடுவார்கள் ஏனையவர்கள் தப்புவதற்காக கடலில் குதிப்பார்கள் அவர்களை நாங்கள் வலைபோட்டு இலகுவாக பிடித்து உணவு உடை வழங்கி இராணுவத்திடம் ஒப்படைப்போம் ஆனால் புலிகளால் கைது செய்யப்பட்ட எமது படைவீரர்களை நாங்கள் பெறுவதற்குச் சென்றபோது அவர்களது கண்ணைக் குத்தியும் கை கால களை உடைத்து நாக்கு மற்றும் அந்தரங்க உறுப்புக்களை அறுத்து அனுப்பிய நிலமையைத்தான் கண்டோம் .

2009 ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்தது. அதற்கு முதல் மே 7ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் பிரபாகரனை சுற்றி 200இறகு மேற்பட்ட பொதுமக்கள் வைக்கப்பட்டதுடன் சுற்றிவர பங்கர் வெட்டி



கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டு றிமோட்கொன்ரோல் பொருத்தியிருந்தனர்.

இந்த நிலையில் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக 300 படைவீரர்களை அனுப்பியபோது அதில் 220 இராணுவத்தினர் கை கால்களை இழந்தனர். நாங்கள் பீரங்கியினைப் பயன்படுத்தி அழித்திருக்க முடியும். ஆனால் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்பதால் பின்னர் சென்ற படையினரால் பிரபாகரனைச் சுற்றிவைக்கப்பட்டிருந்த பொது மக்களை காப்பாற்றினோம்.

இவ்வாறு தான் நாங்கள் மனித உரிமைகளை பாதுகாத்தோம். ஆனால் புலிகள் எவ்வாறு மனித உரிமைகளை காப்பாற்றினார்கள் என்பதன் வித்தியாசம் இதன் மூலம் தெரியும்.

இந்த யுத்தத்தின்போது 28 ஆயிரம் படை வீரர்கள் உயிரிழந்தும், 14 ஆயிரம் படை வீரர்கள் கை, கால்களை இழந்து அங்கவீனர்களானார்கள்.

இந்நிலையில் தமிழ்மக்களை காப்பாற்றாமல் போயிருந்தால் இதில் 25 வீதமான படையினரை இழந்திருக்க முடியாது என்றார்.

# விற்றமின் மருந்துகள் தரப்படுத்தல்

நாட்டில் சந்தையில் காணப்படுகின்ற விற்றமின் மருந்துகளை தரப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருள் அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அங்கீகாரம் இல்லாத பல விற்றமின் மருந்துகள் உள்நாட்டு சந்தையில் காணப்படுகின்றன.

இந்த நிலையிலேயே அவற்றை தரப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

# தரம் 1 இணைப்பில் மோசடி இருவாரங்களுக்குள் தீர்வு

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதில் மோசடிகள் இடம்பெற்றதாக 150 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் 2 வாரங்களுக்குள் பரிசீலனை செய்யப்பட்டு, மக்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க தெரிவித்தார்.

இதற்காக விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதில் மோசடிகள் இடம்பெற்றிருந்தால், அதுதொடர்பில் கல்வி அமைச்சுக்கு அல்லது மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறியத்தருமாறு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# தாமரைக் கோபுர நிர்மாணம் அலரிமாளிகையில் ஆராய்வு



கொழும்பு டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை யில் நிர்மாணிக்கப்படும் இலங்கையின் அதிஉயர தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுரமான தாமரைக் கோபுரத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடை பெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பாதுகாப்பு ,நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட,ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

# இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர 270 மாணவர்களுக்கு வாய்ப்பு

## இந்திய தூதுவர் கே.சின்ஹா



(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு இலங்கை மாணவர்களுக்கு 270 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக இந்திய தூதுவர் வை.கே.சின்ஹா தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற மஹாத்மா காந்தி புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தியாவின் இவ்வாறான முயற்சியானது இந்த உறவுகளை தொடச்சியாக மேம்படுத்தும் வகையிலும் பலப்படுத்தும் வகையிலும் உள்ளது.

இலங்கை இளைஞர்களை அந்தப்புலமைப்பரிசில்களின் முழுப்பயனையும் அனுபவிக்கும்படி இந்திய அரசு ஊக்குவிக்கின்றது. வழங்கப்படுகின்ற புலமைப்பரிசிலினை மும்மடங்காக அதிகரிப்பதன் ஊடாக எமது உறவுகள் வலுப்பெறுகின்றது. இப்புலமைப்பரிசில் மூலம் மாணவர்கள் தமது திறமைகளை காட்டியுள்ளதுடன் இந்திய தேச பிதாவின் இலட்சியங்களைப் பின்பற்றுவர் என நம்பலாம். இந்தியாவின் இம் முயற்சியானது மஹாத்மா காந்தி பல தசாப்தங்களுக்கு முன்னர் கூறிய அனைவருக்கும் கல்வி, வாழ்க்கை ஊடாகக் கல்வி மற்றும் வாழக்கை முழுவதும் கல்வி என்பதாகும். என்றார். (இ)

# நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம்

(முழங்காவில்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கரைச்சி புளியம்பொக்கணை திருவருள் மிகு நாகதம்பிரான் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 7 மணிமுதல் 7.46 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இதில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வெள் ளிக்கிழமை ஆரம்பமாகி 9ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை 3 நாட்கள் இடம்பெறவுள்ளது. அடியார்களின் நெருக்கடியை தவிர்க் கும் முகமாக 3 நாட்களும் இந்நிகழ்வு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபைப்யினர் தெரிவித்துள்ளனர்.

கர்மாரம்பம் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகி கிரியைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து 30 நாட்கள் (2 பட்சம்) மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாள் சங்காபிஷேகம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (112)

# "ரகசியத்தின் நாக்குகள்" நூல்வெளியீட்டு விழா

யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் நெற்கொழு தாசனின் ரகசியத்தின் நாக்குகள் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நிலாந்தன் தலைமையில் திருமறைக்கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நூலின் வெளியீட்டுரையினை கவிஞர் சோ.பத்மநாதன், விமர்சன உரைகளினை யாழ்ப் பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி, கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபன், எழுத்தாளர் பெரியஐங்கரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.

இந் நிகழ்வில் யாழ்.இலக்கிய குவியத்தின் கீதம் அறிமுக நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (63,48)

# சிக்கன கூட்டுறவுச்சங்க புதிய நிர்வாகத்தெரிவு

(சாவகச்சேரி)

சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சாவகச்சேரி பிராந்திய சபையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 19ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பிராந்தியத்திலுள்ள 23 சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதிய தலைவராக கா.கஜேந்திரன், உபதலைவராக வ.தர்மலிங்கம், செயலாளராக ந.சிவகுமாரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். டி.சின்னத்துரை, ஆ.இராசபாலு, வே.ஜீவனந்தினி, க.உதயரதன், வ.சுமதி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும், திருமதி. இ.இராசமணி மகளிர் குழுத் தலைவியாக திருமதி.தே.தீபா உபதலைவியாக தே.மகேஸ்வரி, தெ.தவமலர், ஞா.சகுந்தலாதேவி ஆகியோர் மகளிர் குழு நிர்வாக உறுப்பினர்களாகவும் கா.கஜேந்திரன், கா.பொன்னுச்சாமி, வ.தர்மலிங்கம் ஆகியோர் கடன் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ)

# கால்கோள் விழா

(பருத்தித்துறை)

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் முன்பள்ளியின் கால்கோள் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் முன்பள்ளி முகாமைக்குழு தலைவரும் சனசமூக நிலையத் தலைவருமான மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.(109)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒழுங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு தலைவருமான ஹினைஸ் பாருக் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் 2013இல் நடைபெற்ற அபிவிருத்தித்திட்டச் செயற்பாடுகள், 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள திட்டமுன்மொழிவுகள் என்பன ஆராயப்படவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாந்தைகிழக்கு பிரதேச அனைத்து திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் த.பிருந்தாகரன் அறிவித்துள்ளார். (140)

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## உயர்ந்த மனிதர்

ஒருவர் தன்னுடைய கைவிரல்களைப்பாதி திறந்தும் பாதிமூடியும் வைத்திருக்கின்றார் என்றால் அவர் நிச்சயமாக உயர்ந்த மனிதர் (உயரம் அல்ல) என்பதில் சந்தேகமில்லை. நல்மனப்பாங்குடையவர். பண்பின் சிகரம், சிறிதும் கர்வமின்றி மிகவும் தன்மானங்கொண்டிருப்பர். அன்புக்கு கீழ்ப் படியும் குணக்குன்று ஆனால் அதிகாரத்திற்கு மட்டும் தலைவணங்கார். பிறர் தனக்கு கீழ்ப்படிய வேண்டும் தன்னை ஏற்றுக் கொள்ளவேண்டும் எனவும் கிஞ்சித்தும் எதிர்பார்க்கமாட்டாத மானிடநேயன். கருமித்தனமும் இல்லை. அநாவசியமாகச் செலவும் செய்யார். பாத்திரமறிந்து பிச்சை போடும் புண்ணியவான். ஆடம்பர வாழ்வு அறவே பிடிக்காது. வசதியான வாழ்வு இறைவன் இவருக்கு கொடுத்தவரமாகும். தன்னால் முடியுமானவரை பிறருக்கு உதவும் வள்ளலார். பிறரிடமிருந்து இவருக்கு உதவிதேவைப்படும் சமயத்தில் அதைக் கொடுப்பதற்கு நான்முந்தி நீ முந்தி என்று போட்டா போட்டிபோட்டுக் கொண்டு முன்வருவார்கள். இப்படி ஒருயோகபலன் பெற்றவர். இவருக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய எதிரிகள் சிலர் இருக்கக்காரணம் இவரின் புகழேயாகும்.

இன்முகத்தோடு ஒளிவு மறைவின்றி திறந்த மனத்துடன் எல்லோரிடமும் கலகலப்பாகச் சிரித்துப்பழகுவார். இவருக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை எனின் அதைச்சிறிதும் வெளிப்படையாகக் காட்டாது விலகிவிடுவார். இவரது இயல்பூக்கத்திற்குத்தக்கவாறு பிறரால் எஞ்ஞான்றும் கௌரவித்து மதிக்கப்பெறும். பிரமுகராக வாழ்ந்து கொள்வார். பதவியை அலங்கரிக்கும் உயர்விழுமியங்கள் இவரிடம் காணப்பெறும். பலர் இவரைத்தேடிவந்து தத்தமது பிரச்சினைகள் பற்றி ஆலோசனை கேட்டவண்ணம் இருப்பார். அந்த வகையில் கல்லாவிடினும் அறிவாளியாகவும், நம்பிக்கைக்குப்பாத்திரமானவராகவும் விளங்குவார். இவர் எஞ்ஞான்றும் தனக்குக் கிடைத்ததைக் கொண்டு போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என நினைத்து மகிழ்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ளவாரேயொழிய கிடைக்காததை எண்ணி வருந்திக் கொண்டிருக்கமாட்டார். தன்னுடைய குற்றங்களைப் பிறர் எடுத்துக்காட்ட நேர்ந்தால் அவற்றை உளமார ஏற்றுத் திருந்திக் கொள்வார். இவர்கள் மனிதரில் மாணிக்கம்.

(தொடரும்)

**ஜோதிர் வித்யா ரத்னா**
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

# முரசின் இன்றைய பலன்



[07.02.2014 வெள்ளிக்கிழமை]

**விஜய வருஷம் தை மாதம் 25 ஆம் திகதி.**
**அட்டமி / சித்தம். பரணி நட்சத்திரம் மு.ப. 11.15 வரை.**
**பின் கார்த்திகை.**
**இராகு காலம் 11.05 - 12.35 வரை. சுபநேரம் 06.35 - 08.05 வரை.**

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **மேடம்** | சக ஊழியர்களுடன் கொண்ட சுமூக உறவினால் வேலைப்பளு நீங்குதல், ஞாபக இழப்பினால் பொருள் கை தவறிவிடல். |
| **ரிஷபம்** | காவலாளியை நியமித்திருந்தாலும் பூட்டுப்போட மறக்காமல் சென்றதால் துயர் விலகுதல், குழந்தைப் பாக்கியம் கிடைத்ததில் மகிழ்வு. |
| **மிதுனம்** | தொலைபேசி மூலம் பயமுறுத்தல் செய்தி கேட்டு அவலம், மாதாவின் தேகநலம் பற்றிய அச்ச உணர்வு. |
| **கடகம்** | சம்பளக்குறைவினால் தொழிலைக்கைவிடும் நிலை, நோயை அலட்சியம் செய்ததால் அச்சம் ஏற்படல். |
| **சிம்மம்** | பொறுமையை கைக்கொண்டதால் ஆபத்து விலகல், பணமுடையினால் காசோலை திரும்புதல். |
| **கன்னி** | மாத்திரை ஒவ்வாமையால் தேகநலம் பாதிப்படைதல், பொறுத்த கட்டத்தில் நண்பரால் பண உதவி. |
| **துலாம்** | வியாபாரம் விருத்தியடைய ஆலோசனை பெறல், ஏழரைச் சனியால் புதுமுயற்சி ஆரம்பிக்க தயக்கம். |
| **விருச்சிகம்** | பலனை எதிர்பாராது கடமையைச் செய்ததினால் பாராட்டும் மதிப்பும் கிடைத்தல், விலங்கு குறுக்கேபாய்வதால் விபத்தேற்படல். |
| **தனுசு** | ரகசியம் வெளிப்பட்டதால் அவமானப்படல், இழுபட்டிருந்த நிலுவை கிடைத்தல். |
| **மகரம்** | காரியத்தில் கவனமாக இருந்ததால் ஆபத்து விலகல், விவாக முயற்சி வெற்றி தரல். |
| **கும்பம்** | சகோதரர் உதவியினால் வாகனயோகம், பிதாவின் தேகநலம் மேம்பாடடைதல். |
| **மீனம்** | சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் பணிச்சுமை நீக்கம், வெளியூர் பயணம் தொடர்ந்து இழுபறிநிலை. |

# ஸ்திரமான நிலையில் நியூசிலாந்து



(ஒக்லாண்ட்)

வில்லியம்ஸன்,மக்கலம் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி நெருக்கடியிலிருந்து மீண்டதுடன் வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நியூசிலாந்தின் ஒக்லாண்ட்டில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 30 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மக்கலம், வில்லியம்ஸன் இணை ஆரம்பத்தில் தடுமாறியிருந்தது. குறிப்பாக, வில்லியம்ஸன் ஸ்லிப் திசையில் கொடுத்த பிடியை முரளி விஜய் கோட்டைவிட்டார். பின்னர் சுதாகரித்துக் கொண்ட இந்த ஜோடி இந்தியப் பந்து வீச்சாளர்களை உண்டு இல்லையெனச் செய்து ஓட்டங்களை வாரிக் குவித்தது. சிறப்பாக ஆடிய மக்கலம் எட்டாவது சதத்தையும், வில்லியம்ஸன் ஐந்தாவது சதத்தையும் பூர்த்தி செய்தனர். தொடர்ந்து அதிரடியில் கலக்கிய இந்த ஜோடி 221 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. அடுத்து களமிறங்கிய அண்டர்சன் கப்டன் மக்கலமிற்கு இணையாக அதிரடியாக ஆடி வருகிறார். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்



காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் கப்டன் மக்கலம் 210 பந்துகளை எதிர் கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 18 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 142, அண்டர்சன் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். மற்றும் வில்லியம்ஸன் 172 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 113 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் இசாந்த் சர்மா, சகீர்கான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக்கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## நைஜீரிய அணி இலங்கை வருகை

(அபுஜா)

நைஜீரிய கிரிக்கெட் அணி, இலங்கைக்கான கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) சார்பில், உலகக் கோப்பை டிவிசன் 5 லீக் தொடர் மலேசியாவில் எதிர்வரும் மார்ச் 4 முதல் 14 வரை நடக்கவுள்ளது.

இதற்கு தயாராகும் வகையில், ஐ.சி.சி., யின் உறுப்பு நாடு நைஜீரிய அணி, முதன் முறையாக இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. பெப்ரவரி, 21 முதல் மார்ச் 3 வரை போட்டிகளில் பங்கேற்கிறது.

இதுகுறித்து நைஜீரிய கிரிக்கெட் கூட்டமைப்பின் ஆன்யேமா கூறுகையில், உலகின் முதல் எட்டு தரவரிசையில் உள்ள இலங்கை அணியுடன் விளையாடுவது மிகப்பெரிய சாதனை. தவிர, உலகின் முன்னணி வீரர்களுடன் விளையாட வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சி தான், என்றார்.

## ஐ.சி.சி.யின் திட்டத்திற்கு இலங்கை எதிர்ப்பு

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் சபையின் அண்மைக்கால திட்டத்திற்கு இலங்கை கிரிக்கெட் தன்னுடைய முழுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அண்மையில் சர்வதேச கிரிக்கெட் சபை இந்திய கிரிக்கெட் சபை, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆகியவற்றை வணிக மற்றும் வர்த்தக குழுவை முகாமைத்துவம் செய்யும் அமைப்பை உருவாக்கும் திட்டத்தை முன் மொழிந்து இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இலங்கை கிரிக்கெட் அமைப்பின் நிர்வாக சபை, முன்னாள் அணித்தலைவர்கள், முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்கள், விளையாட்டுத்துறை அமைச்சு அங்கத்தவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஆராய்ந்து சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என ஏக மனதாக முடிவு எடுக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. எடுக்கும் முடிவுகள், சர்வதேச கிரிக்கெட் சபையில் இலங்கைக் கிரிக்கெட் வைத்துள்ள சலுகைகளை இழக்காத வகையில் முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

## ஆஷஸ் தோல்வி எதிரொலி பலிக்கடாவான பீற்றர்சன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளது. இது தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் இணைந்து பீற்றர்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இங்கிலாந்துக்காக விளையாடியது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம். ஆயினும் என்னுடைய வியக்கத்தக்க சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்ததில் வருத்தமே. கடந்த 9 ஆண்டுகளில் நானும், எனது சக அணியினரும் இணைந்து படைத்த சாதனைகளுக்காகப் பெருமை கொள்கிறேன். இங்கிலாந்து அணி மிகப்பெரிய வெற்றிகளைக்குவித்த காலத்தில்விளையாடியதும் தலைசிறந்த வீரர்களுடன் விளையாடியதும் எனது மிகப்பெரிய அதிர்ஷ்டம் என கருதுகிறேன்.

ஒரு கிரிக்கெட் வீரராக நான் சாதிக்க இன்னும் நிறைய இருக்கிறது என நம்புகிறேன். நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவேன். எனினும் இங்கிலாந்துக்காக இனி விளையாடமுடியாது என்பது வருத்தமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

33 வயதாகும் பீற்றர்சன் 104 டெஸ்ட் போட்டியில் 8,181 ஓட்டங்களையும், 136 ஒருநாள் போட்டியில் 4,440 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் பீற்றர்சனின் ஓய்வு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையின் புதிய நிர்வாக இயக்குநரான போல் டொன்டன் கூறுகையில்,



உலகக்கோப்பை போட்டிக்காகஅணியை கட்டமைப்பதன் ஒரு பகுதியாக பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளார். இது கடினமான முடிவு என்றார்.

பீற்றர்சனின் திடீர் ஓய்வு அறிவிப்பு கடும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது.இது தொடர்பாக கருத்துத் தெரிவித் துள்ள முன்னாள் வீரர் மைக்கல் வோகன், ஆஷஸ் தோல்விக்கு ஒரு பெரிய பலியாடு தேவைப்பட்டது என்று விமர்சித்துள்ளார். முன்னாள் வீரர் அலெக்ஸ் ஸ்ருவேர்ட் கூறுகையில்,பீற்றர்சன் நியாயமாக நடத்தப்படவில்லை. இங்கிலாந்து வெற்றிபெற்றபோது யாரும் எதையும் கேட்கவில்லை. ஆனால் தோற்றபோது எல்லோரும் பீற்றர்சனை நோக்கி கை நீட்டுகிறார்கள். இது அநியாயம் என்றார்.

## இல்ல மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சண்முககுமார், கௌரவ விருந்தினராக வித்தியாலய முன்னாள் பிரதி அதிபர் எஸ். உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்.பி.)

(பூநகரி)

பூநகரி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எஸ்.ஆர். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், விசேட விருந்தினர்களாக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரட்ணம், பூநகரி வைத்திய அதிகாரி வைத்தியர் பி. கோகுலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (112)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.[illegible] மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் திருமதி வ. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளர் திருமதி சிவமதி நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (11)

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடாத்தப்படும் வீர,வீராங்கனைகளுக்கான வீதியோட்டம் இன்று காலை 6.00 மணிக்கு கல்லூரி அதிபர் இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. கல்லூரி முன்றலில் ஆரம்பமாகும் இவ்வீதியோட்டம் கல்லூரி முன்றலிலேயே நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ([illegible]

## விஸ்டன் முகப்பில் சச்சின் படம்

(புதுடில்லி)

கிரிக்கெட் வீரர்களின் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ்டன் பத்திரிகையின் 151ஆவது பதிப்பு ஏப்ரல் 10ஆம் திகதி லண்டனில் வெளியிடப்படவுள்ளது.இந்த இதழின் முன்பக்கத்தில் பாரத ரத்னா சச்சின் டெண்டுல்கரின்படம் இடம் பெறுகிறது. விஸ்டன் புத்தகத்தின் முன் பக்கத்தில் இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவரின் புகைப்படம் இடம் பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

## சம்சூர் ரஹ்மான், இம்றுல் கைல் கன்னிச் சதம் பங்களாதேஷ் பதிலடி




(சிட்டகொங்)

சம்சூர் ரஹ்மான், இம்றுல் கைல் ஆகியோரின் கன்னிச் சதத்தின் மூலம் இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி பங்களாதேஷின் சிட்டகொங்கில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றவேளை முதல் விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த சம்சூர் ரஹ்மான், இம்றுல் கைல் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பாக ஆடி தமது கன்னிச் சதத்தைப் பதிவு செய்தனர். இரண்டாவது விக்கெட்டுக்களாக இணைந்த இந்த ஜோடி 232 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கியவர்களும் சீரான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று ஆட்டமிழந்தனர். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 409 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் சம்சூர் ரஹ்மான் 191 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர் 11 பவுண்டரிகள் அடங்கலாக 106, இம்றுல் ம்கைல் 218 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 17 பவுண்டரிகள் அடங்கலாக 115, நசீர் உசைன் 42, எம். ரஹீம் 20, ஷகிப் அல் ஹசன் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டி. பெரேரா மூன்று, அஜந்த மென்டிஸ் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இரண்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி 178 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 587

# பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர்

## புனித ஜேம்ஸ் திரேசா முதலிடம்





(யாழ்ப்பாணம்)

யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் திரேசா இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 3ஆம் திகதி புனித யாகப்பர் ஆலய முன்றலில் நடைபெற்றது. வீராங்கனைகள் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் திரேசா இல்லம் 417 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், மரியாள் இல்லம் 357 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஜோசப் இல்லம் 320 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இதில் சம்பியன் வீராங்கனைகளாக எட்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர். 11 வயதுப் பிரிவில் எம். நிருத்திகா, 13 வயதுப் பிரிவில் ஆர். ரெனாலக்சி, 15 வயதுப் பிரிவில் ஆர். யூனிஸ், ஏ. நர்மதா, 17 வயதுப் பிரிவில் ஐ. மேரிலொபினா, 19 வயதுப் பிரிவில் பி. ஆனந்தி, 21 வயதுப் பிரிவில் ஜே. சிலோஜினி, மரிய லெபாஜினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனோல்ட், கௌரவ விருந்தினராக தாளையடி பங்குத் தந்தை மரியாம்பிள்ளை யேசுரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீமுருகதாஸ் காந்தன் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு வீராங்கனைகளை உற்சாகப்படுத்தினர். (எஸ்.பி.)

## தண்டுவான் அரசினர் த.க.பாடசாலை முதலிடம் இளங்கோ இல்லம்





(தண்டுவான்)

தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் இளங்கோ இல்லம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 31ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

தண்டுவான் அரசினர் தழிழ்க் கலவன் பாடசாலை யில் இல்லமெய்வல்லுனர் போட்டி வெகுசிறப்பாக இடம்பெற்றுள்ளது. இதில் இளங்கோ இல்லம் 442 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வள்ளுவர் இல்லம் 415 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், பாரதி இல்லம் 371 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டது.

பாடசாலை அதிபர் எ. பன்னீர்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டனர். மற்றும் ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கயற்செல்வன், .தண்டுவான் 2ஆம் கட்டளை அதிகாரிமேஜர் பிரியங்க பத்திரன, துணுக்காய் விஞ்ஞான உதவிக்கல்வி பணிப்பாளர் சி.இரவீந்திரகுமார், .தண்டுவான் கிராம சேவையாளர் திருமதி. கி.கிருபாகரன், பெரிய இத்திமடு கிராம சேவையாளர் திருமதி.மே.ஜோன் நெல்சன், பழம்பாசி கிராம சேவையாளர் செல்வி கோ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (77)

## இன்றைய போட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பங்கையச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேள், சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும், பிரதேச சபையின் பிரதித் தவிசாளருமான நகுலேஸ்வரன் மற்றும் கரைச்சிப் பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (எஸ்.பி.)

---

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம. மணிசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரித்தானிய தமிழர் விளையாட்டுச் சங்கத் தலைவர் ரி. தர்மகுலசிங்கம், சிறப்பு விருந்தினராக திருமதி பாலசுப்பிர மணியம், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் அதிபர் ப. லோகநாதன், கல்லூரியின் முன்னாள் உப அதிபர் செல்வி இ. சும்பந்தர் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர். (93)


---

மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பி. மாதவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்கள மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவானந்தராஜா, தேசிய சேமிப்பு வங்கி ஓய்வு பெற்ற முகாமையாளரும், பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவருமான கே. கமலசேகரம், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியரும், பெண் சாரணியத்தின் வடமாகாண ஆணையாளருமான திருமதி ஆர். வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (48)



இடைக்காடு மகாவித்தியாலயம் 48



இளவாலை மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை 48



பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் 48

**"சாத்திரி" எனப்படும் ஶ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். யாழ் மானிப்பாய் கிராமத்தில் பிறந்த இவர், 1984ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பில் இணைந்து புலிகள் அமைப்பில் "சியாம்" என்கிற புனை பெயரில் இயங்கினார். புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் "சக்கை" என்கிற பெயரும் சேர்ந்து "சக்கை சியாம்" என பலராலும் அழைக்கப்பட்டார். புலிகளின் சர்வதேசப் பிரிவி லும் பணியாற்றி அதில் இருந்து வெளியேறிய பின்னர் பிரான்ஸ் நாட்டில் வசிக்கத் தொடங்கியதும் "சாத்திரி" என்கிற புனைபெய ரில் பத்திரிகைத் துறையிலும் எழுத்துத் துறையிலும் வலம் வருகிறார்.**

பேட்டி கண்டவர்: அருளினியன்

# சாத்திரி பேசுகிறேன்

**ஈழ விடுதலைப் போராட்டத்தில் நீங்கள் இணைந்து கொள்ளத் தூண்டுதலாக அமைந்த சம்பவம் என்ன?**

அந்தக்கால ஏனைய இளைஞர்கள் போல ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள எனக்கும் தூண்டுதலாக அமைந்த சம்பவம் இலங்கையில் 83ஆம் ஆண்டில் நிகழ்ந்த இனக் கலவரம் தான்.



83 கலவரத்திற்கு முன்பே ஈழத்தில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்திருந்தாலும் அது பற்றிய அக்கறைகள் ஏதுமற்ற சாதாரண பாடசாலை மாணவனாகவே இருந்தேன். ஆனால் 83 கலவரத்தின் தமிழர்களின் பாதிப்புக்கள் பற்றிய செய்திகள் தமிழ் சகோதரிகள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட செய்திகள் மற்றும் அகதிகளாக ஆயிரக் கணக்கில் கப்பலில் காங்கேசன்துறையில் வந்திறங்கிய கொழும்புத் தமிழர்களின் துயரங்களை நேரில் பார்த்ததும் ஒரு இளைஞனுக்கேயுரிய கோபமும் பழிக்கு பழிவாங்கும் உணர்ச்சியும் ஒன்று சேர என்னை ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டேன்.

**பல விடுதலை இயக்கங்கள் இருந்த போதும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பில் நீங்கள் இணைந்து கொள்ளக் காரணம் என்ன?**

அன்று பல விடுதலை இயக்கங்கள் இருந்தது உண்மை. முதலில் அன்றைய கால கட்டத்தில் பெரிய இயக்கமாக இருந்த புளொட் அமைப்பில் சேருவதற்காகவே போயிருந்தேன். இயக்கத்திற்கு போனதுமே கையில் ஆயுதம் தருவார்கள் என எதிர்பார்த்து போயிருந்த எனக்கு அவர்கள் ஒட்டுமொத்த மக்கள் போராட்டம் நடக்கவேண்டும் என்று சொல்லி அரசியல் வகுப்புக்களை வைத்து வாழ்க்கையை வெறுக்கப் பண்ணி விட்டார்கள். அடுத்ததாக தீவிர இடதுசாரிக் கொள்கைகளை கொண்டிருந்த ஈ.பி. ஆர்.எல்.எவ். அமைப்பிடம் போயிருந்தேன். அவர்களோ செஞ்சீனம், கியூப விடுதலைப் போராட்டம் என்கிற இரண்டு பெரிய புத்தகங்களை கையில் தந்து அதனை படித்து வரச் சொல்லி அதன்பின்னால்தான் இயக்கத்தில் இணைப்போம் என்றார்கள். "செஞ்சீன" புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன் சாதுவாக



தலை சுற்றியது. புரியாத சொற்கள் கொண்டு எழுதப் பட்டிருந்ததாகத் தெரிந்தது. கியூப விடுதலைப் போராட்டத்தை தூக்கிப் பார்த்தேன் வலு பாரமாக இருந்தது. இந்தப் புத்தகங்களை படிக்கின்ற நேரம் பேசாமல் பாடசாலைக்கே போய் படித்திருக்கலாம் என்று மனம் சொன்னது. இது வேலைக்கா காது என்று தோன்றிய கணத்தில் அவற்றை தூக்கியெறிந்து விட்டு புலிகள் அமைப்பைச் சேர்ந்த அன்பு என்பவரை சந்தித்தேன். அவர் உடனடியாகவே எனது கைகளில் 3.8 றீற்றா வகை கைத்துப்பாக்கியை கொடுத்து குறிபார்த்து சுடும்படி சொன்னார். புத்தகங்கள், பாடமாக்கல்கள், சொற்பொழிவுகள் எதுவுமே இல்லை. அது எனக்கு பிடித்திருந்தது. எனவே புலிகள் அமைப்பில் இணைந்து விட்டேன். இணைந்த பின்பு பயிற்சிகள் கடினமாக இருந்தது.

**உலகப் புரிந்துணர்வு இல்லாத, நல்லது கெட்டது புரியாத இளைஞர்கள் கைகளில் ஆயுதம் கொடுத்தது சரியா?**

இந்தக் கேள்வியை நீங்கள் இந்திய உளவமைப்பான றோவிடம் அல்லது ஈழ விடுதலை இயக்கங்களிற்கு பயிற்சியும் ஆயுதமும் கொடுக்க முடிவு செய்த இந்திரா காந்தி அம்மையாரின் ஆவியிடம்தான் கேட்கவேண்டும். ஏனெனில் அன்று ஈழ விடுதலை இயக்கங்களிற்கு ஆயுதங்களும் பயிற்சியும் இந்தியா கொடுக்காது விட்டிருந்தால் பிரபாகரன் மட்டுமல்ல மற்றைய இயக்கத் தலைவர்களும் இப்போது எங்காவது ஒரு வெளிநாட்டில் அகதி தஞ்சம் கோரி வாழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள். அல்லது எண்பதுகளிலேயே இறந்துபோயிருப்பார்கள். அதுவும் இல்லா விட்டால் இலங்கை சிறைகளில் இருந்திருப்பார்கள்.

**இந்திய உளவு அமைப்பான "றோ"வின் பங்களிப்பு போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இறுதிப் போர் வரை எப்படி இருந்தது?**

இலங்கையில் அன்றிருந்த ஜே.ஆர். தலைமையிலான அரசை போராளிக் குழுக்கள் மூலம் மிரட்டி அங்கு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவே ஈழ விடுதலை இயக்கங்களிற்கு பயிற்சி மற்றும் ஆயுதங்கள் கொடுக்க "றோ". அமைப்பு முன்வந்தது. இது அனைவரிற்கும் தெரிந்த விடயம். ஆனால் எம்மில் பலர் இந்திரா அம்மையார் உயிருடன் இருந்திருந்தால் தமிழீழத்தை பெற்றுக் கொடுத்திருப்பார் என்ற கருத்தை கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இல்லை. ஏனெனில் இந்திய உளவமைப்பானது தனியாக ஒரு இயக்கத்திற்கு பயிற்சி கொடுக்காமல் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, விடுதலைப் புலிகள், ஈரோஸ் என ஐந்து விடுதலை இயக்கங்களிற்கு பயிற்சி கொடுத்ததன் மூலம் ஒரு இயக்கம் தங்கள் கட்டுப்பாட்டை மீறிப் போனாலும், இன்னொரு இயக்கத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்து தங்கள் சொற்படி இயக்கலாம் என்ற நோக்கம் இருந்தது. இந்த இந்தியாவின் தந்திரத்தை உணர்ந்த புளொட் அமைப்பும் புலிகளும் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவோடு விலத்தியிருக்கவே விரும்பினார்கள். மற்றைய அமைப்புக்கள் பொருளாதார ரீதியாகவும், பின்னாளில் புலிகளால் தடை செய்யப்பட்ட பின்னர் தங்கள் பாதுகாப்பிற்காகவும் "றோ"வோடு உறவுகளை கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் அவர்களிற்கு இருந்தது.

**1**

அதே நேரம் புலிகள் அமைப்பும் கூட "றோ" வினது கட்டளைகளிற்கு இணங்க பல தாக்குதல்களை நடாத்தியிருந்தார்கள். குறிப்பாக புலிகள் 1985 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் பொதுமக்கள் மீது நடாத்திய தாக்குதல். மருதானை மற்றும் புறக்கோட்டை குண்டு வெடிப்பு ஆகியனவற்றை உதாரணமாக சொல்லலாம்.

இலங்கைத் தீவு இந்தியாவிற்கு அருகில் இருக்கும் வரை இந்தியாவின் அரசியல் தாக்கமானது இலங்கையில் இருந்து கொண்டே தானிருக்கும். அதனை ஈழத் தமிழர் தரப்பு எப்படி கையாள்கிறது என்பதைப் பொறுத்துத்தான் ஈழத் தமிழரின் எதிர்கால அரசியலும் அவர்களின் வாழ்வும் அமையும்.

**இந்திய உளவமைப்பான "றோ"தான் புலிகளை அழித்து முடித்தது என்கிறீர்களா?**

இல்லை,. வேறு பல நாடுகளோடு இந்திய உளவமைப்பும் சேர்ந்தே அழித்தது. இலங்கையரசோடு சேர்ந்து இந்தியா மட்டுமே புலிகளை அழித்து முடித்ததாக எங்களில் பலர் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் புலிகளை அழித்து முடிக்க அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கி அவர்களது சர்வதேச ஆயுத வழங்கல்களை தடுத்து நிறுத்தி புலிகளின் வானொலித் தொடர்புகளை ஒட்டுக்கேட்டு, அவர்களது கனரக ஆயுத நகர்வுகளை கண்காணித்து அனைத்தையும் உடனுக்குடன் இலங்கையரசிற்கு தெரியப்படுத்தி இலங்கை அரசு புலிகளை அழிக்க பேருதவி செய்தது அமெரிக்காவும் கனடாவுமே ஆகும். மேலும் நேரெதிர் முரண்பாடுகளைக் கொண்ட இந்தியா, பாகிஸ் தான், அமெரிக்கா, கியூபா, சீனா, ஜப்பான் என உலகமே ஓரணியில் திரண்டு இலங்கை யரசிற்கு தேவையான அத்தனை வளங்களையும் அள்ளிக்கொடுத்து புலிகளை அழித்து முடித்தார்கள். ஆனால் இவர்களை குறை சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை என நினைக்கிறேன். தங்களிற்கான குழியை புலிகள் தாங்களே தோண்டியிருந்தார்கள்.

(தொடரும்)


# யாழ்ப்பாணத்தில் கவிஞர் யுகபாரதி

- பூ.நகுலன் -

ஆனந்தம் படத்தில் வருகின்ற "பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன் ஒற்றை நாணயம்" முதற் பாடலாக எழுதியவர், பதின்மூன்று வருடங்களாக திரைப்பாடல்கள் எழுதி வருபவர், கவிஞருமாகிய "யுகபாரதி". இவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, கலந்துரையாடுகையில் கிடைத்த குறிப்புகளை தொகுத்துத் தருவதாக இக்கட்டுரை அமைகின்றது.

யுகபாரதியோடு சமகாலத்தில் பாடல் எழுத வந்தவர்கள் பத்தொன்பது பேர் வரையில் இருந்தனர். இன்று நான்கு பேர் வரையிலேயே சினிமாவில் நிலைத்திருக்கின்றார்கள். சினிமாவில் நிலைத்திருப்பதற்கு கடுமையாக உழைக்க வேண்டியது அவசியமாகும்.

யுகபாரதி சிறந்த கவிஞராக தமிழ்நாட்டு அரசின் விருது கிடைக்கப்பெற்றவர்.



எழுதுவதற்கு தயாராகும் ஒருவன் நிறைய விடயங்களைப் படிக்கவேண்டும் என்பது யுகபாரதியின் கருத்தாக அமைகின்றது. நிறைய விடயங்களை படிக்கின்றபோது எழுதுவதற்கு தயக்கம் ஏற்படும். தான் படித்த விடயங்களோடு ஒப்பிட்டு தன் எழுத்துக்களை மதிப்பீடு செய்து கொள்ள வசதி ஏற்படும்.

எவ்வளவுக்கு எவ்வளவு நாம் கற்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சமூகப் பார்வை தோன்றும். எழுத்து என்பது ஒரு நாள் வேலை கிடையாது. பல நாள் முயற்சியின் பெறு பேறே எழுத்தாகும் என்பதை புரிதல் வேண்டும்.

தமிழ் மரபு இலக் கணங்கள் கவிதை இலக்கணங்களை படித்துப் புரிந்து கொண்டு, கவிதையின் பல்வேறு தன்மைகளை இனங் கண்டு எழுதத் தொடங்குதல் வேண்டும்.

சினிமாவிற்கு பாட்டெழுதுவதற்கு முன்னர் கணையாழி பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணிபுரிந்த காலங்களில் பல்வேறு அனுபவங்களைப் பெற முடிந்தது.

ஒருவருக்கு தான் எழுதுவது தான் சிறந்தது என்ற எண்ணம் உருவாகுமேயானால் அது அவனது வளர்ச்சியை தடுத்து நிறுத்தி விடுவதாக அமையும். நாம் எழுதும் கவிதை அல்லது எழுத்து எமக்கு அல்லது படிப்போருக்கு என்ன செய்தது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

கவிதைகள் பொதுமைப்படுத்தப்பட்ட அம்சங்களோடு இருப்பனவும் எளிமையாக இருப்பனவும் மக்களை எளிதில் சென்றடையும்.

ஒருவன் முழுமையைத் தேடி எழுத வேண்டும். முழுமை அடைந்துவிட்டோம் என்ற நினைப்பில் எழுதுவதை தவிர்க்க வேண்டும். இமான், வித்யாசாகர், இளையராஜா போன்ற முன்னணி இசையமைப்பாளர்களுடன் சேர்ந்து பணியாற்றியுள்ளேன். இயக்குநர் லிங்குசாமியின் நட்பு, வித்யாசாகரின் தொடர்பு அவருடனான முதற்சந்திப்பு என்னால் என்றும் மறக்க முடியாதன.சினிமாவில் வாய்ப்பு என்பது ஒரு முறை வந்துவிட்டால் அதைத் தக்க வைத்துக் கொள்வது போராட்டம் நிறைந்த ஒன்றாக அமைகின்றது.

எந்த ஒரு படைப்பாளியும் வெற்றி கிடைக்கும் வரையில் போராட வேண்டும். சினிமாத்துறையில் பொதுவாக வெற்றி அடைந்தவரின் வார்த்தைகளுக்குத்தான் மரியாதை உண்டு. ஆகவே வெற்றி பெறும் வரை அடக்கி வாசிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண இலக்கியவாதிகள் கவிஞர்கள் என்று சந்தித்துக் கலந்துரையாடியதில் மகிழ்ச்சி. யாழ்ப்பாண மக்களிடத்தில் தனியான மதிப்பும், மரியாதையும் எனக்குண்டு என்றும் யுகபாரதி குறிப்பிட்டார்.




# முதன் முதலாக....

▸ உலகில் முதன்முதலில் புகையிலை விற்பனை மற்றும் பொது இடங்களில் புகை பிடிப்பதை தடைசெய்த முதல் நாடு பூட்டான்தான்.

▸ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் பகவத்கீதை புத்தகம் 1785ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது.

▸ அண்டார்டிக் கண்டம் உலக நாடுகளுக்குத் தெரிய வந்தது 1820-ஆம் ஆண்டில்தான்.

▸ மின்சார உயர்த்திகள் (Lift) முதலில் புழக்கத்திற்கு வந்தது 1889-ஆம் ஆண்டு - அமெரிக்காவில்.

▸ முதன்முதலில் பாண்டேஜ் துணியை அறிமுகம் செய்தவர்கள் எகிப்தியர்கள்தான்.

▸ முதன்முதலில் முகப்பவுடர் தயாரித்தவர்கள் இத்தாலியர்கள்.

▸ பரீட்சை எழுதும் முறையை உலகுக்கு அறிமுகம் செய்த நாடு சீனா.

▸ "கிரெடிட் கார்ட்" என்ற சொல் மக்கள் மத்தியில் புகழ்பெற்றுவிட்டது. ரால்ப் பெல்லாமி என்ற எழுத்தாளர் "ஓர் பார்வை" என்ற நூலில் இந்தச் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தினார்.

▸ ஒருவர் கை ரேகையைப்போல் இன்னொருவருக்கு இருப்பதில்லை என்ற உண்மையைக் கண்டுபிடித்து முதலில் கூறியவர் கால்ரன் என்ற இங்கிலாந்துக்காரர்.

▸ முதன்முதலாக டின்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை போர்க்காலங்களில் பயன்படுத்தியது நெப்போலியனின் படைகள்தான்.

▸ தற்போதுள்ள முச்சக்கர வாகனங்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது இத்தாலியைச் சேர்ந்த வெஸ்பா ஸ்கூட்டர் தயாரிப்பு நிறுவனமான பியாஜியோ நிறுவனம்தான்.

▸ முதன்முதலில் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட பொருள் சிலுவை.

▸ கடலுக்கடியில் முதல் புகைப்படம் 1893-இல் எடுக்கப்பட்டது.

▸ தமிழில் வெளிவந்த முதல் இலக்கியக் கலைக்களஞ்சியம் "அபிதான கோசம்". அது யாழ்ப்பாணம் முத்துத்தம்பி பிள்ளையால் எழுதப்பட்டது.

▸ இந்தியாவில் முதல் நோபல் பரிசு பெற்ற இந்தியர் ரவீந்திரநாத் தாகூர்.

▸ தற்போதுள்ள தேயிலைத்தூள் பைக்கற் பொதிசெய்யும் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் தோமஸ் சல்லிவன் என்ற அமெரிக்க டீக்கடைக்காரர். இதை நியூயோர்க்கில் 1904 ஆம் ஆண்டு வடிவமைத்தார்.

---

மர்ம நாவல்களின் ராணி என்று புகழப்படும் ஆங்கில நாவலாசிரியை அகதா கிறிஸ்டி முதலில் எழுத ஆரம்பித்தபோது அவருடைய நாவல்களுக்குப் பெரிதான வரவேற்பு ஒன்றுமில்லை. அவர் எழுதத் தொடங்கிய ஆறாவது வருஷம் அவருடைய வாழ்க்கையில் ஒரு மோசமான திருப்பம். அவருடைய தாய் இறந்து போனாள்.

# மர்ம நாவல்களில் மகத்தானது!

கணவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்.

இதனால் மனம் உடைந்த அகதா கிறிஸ்டி திடீரென்று ஒருநாள் காணாமற் போய்விட்டார்! அவருடைய கார் ஒரு கிராமத்துச் சந்தில் கிடந்தது. செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவராதலால் அவர் காணாமற் போனது நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. பத்து நாட்களுக்குப் பிரிட்டிஷ் பொலிஸார் சல்லடை போட்டுத் தேடினார்கள். கடைசியில் ஒரு ரகசிய டெலிபோன் செய்தி கிடைத்தது. அதைக் கொண்டு அவர் தலைமறைவாய்த் தங்கியிருந்த ஹோட்டலைக் கண்டுபிடித்தார்கள். அகதா கிறிஸ்டி என்ற பெயரில் தங்காமல் கணவருடைய காதலி பெயரில் அறை எடுத்திருந்தார்!

அந்தச் சமயம் அவர் எழுதி வெளியான The Murder of Roger Ackroyd என்ற நாவல் அமோகமாக விற்பனையாயிற்று! அதற்கு ஒரு விளம்பர ஸ்டண்ட்டாகத்தான் அவர் தலைமறைவானார் என்றும் அப்போது பேசப்பட்டது. (எது எப்படியோ, இதுவரை ஆங்கிலத்தில் வெளிவந்த எல்லாத் துப்பறியும் மர்ம நாவல்களில் இந்த நாவல்தான் சாதனை நாவல் என்று எல்லா பிரபல க்ரைம் எழுத்தாளர்களாலும் வாக்கெடுப்பில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று) _

('அறிவுக்கு ஆயிரம் வாசல்' நூலில்)




# இது தெற்குடன் உறவுகளை நிரந்தரமாக முறித்துக் கொள்வதற்கான முயற்சியா?

– சாலையூரான் –

வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வுத் தீர்மானங்கள் அரசுக்கு எதிரான விவகாரத்தில் இறுதியானவையும், தீர்மானகரமானவையும் என்கிற ஒரு தோற்றப்பாட்டை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டுவர விரும்பும் நாடுகளுக்கு ஒரு முன்னோடி நடவடிக்கையாகக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த முயற்சிகள் உண்மையில் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மையைக் கொண்டு வருமாயின், நாமும் மகிழ்ச்சியடையலாம்.

ஆனால், எதிர்வரும் மார்ச் ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான நாடுகள் தத்தமது நலன்களில் இருந்து எத்தகைய முறையில் இலங்கை விவகாரத்தைக் கையாளும் அல்லது கையில் எடுக்கும் என்பதைப் பொறுத்தே அதன்படி இலங்கை எதிர்கொள்ள இருக்கும் நெருக்கடியும் அமையும்.

இவ்வாறு இலங்கை அரசுக்கு ஏற்படுத்தப்படும் நெருக்கடி தமிழ் மக்களுக்கு ஏதாவது உரிமையைக் கொண்டு வருமா?

தமிழ்த் தரப்பை இலங்கை அரசுடன் பரமவைரியாக்கிக் கொண்டு வெளிநாடுகள் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தரும் தீர்வு, அப்படி என்னதான் என்பதையும் இந்தத் தமிழ்த் தலைவர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரேரணைகளில் இருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இந்த முயற்சியுடன் இலங்கை அரசுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் இருக்கும் அற்பசொற்ப உறவுகளையும் இது முடிவுக்குக் கொண்டு வந்து விடும். அல்லது அப்படியொரு நிலை ஏற்பட வேண்டும் என்பதை விரும்பியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த இடத்தில் இதுவரை மேற்கொண்ட அரசின் நலத்திட்டங்கள் முறையாகச் சென்றடையாத பாதிப்புக்குள்ளான மக்களின் நலன்களில் இருந்து அவசியமாக வடக்கு மாகாண சபை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

போரில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருந்தால், அதற்கு நீதி வேண்டும் என்பது சரி. ஆனால், அதற்காக முன்வைக்கும் பிரேரணை அவ்வாறு மரணித்தவர்களின் உறவுகளுக்கு, குடும்பங்களுக்கு ஏதாவது நன்மையைக் கொண்டு வருவதாக அமைய வேண்டும் என்பதே சரியான சிந்தனை முறையாகும்.

அதனைச் சாத்தியமாக்கிக் கொள்ள வேண்டுமாயின், அதற்காக அரசுத் தரப்பில் மேற்கொண்டுள்ள நலத்திட்டங்கள் எங்கெங்கே, எந்த அளவில், எந்த வழிமுறைகள் ஊடாக நடைபெற்றிருக்கின்றன என்கிற குறிப்பான நிலைமைகளில் இருந்து அதனைப் பேச வேண்டும்.

அதன்மூலமே அரசின் நலத்திட்டங்களால் நன்மைபெறத் தவறிய குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு அரசு உதவுவதற்கான வழியைக் காண்பிக்க முடியும்.

பதிலுக்கு எதுவுமே தமிழ் மக்களுக்காக நடைபெறவில்லை என்றால் அதன் மறுவிளக்கம், இனி தமிழ் மக்களுக்காக அரசு எதையும்



செய்யக் கூடாதெனச் சிந்திக்க நிர்ப்பந்திக்கும் ஒரு முயற்சியாகவே அமையும்.

இன்று வடக்கிலுள்ள விவசாயிகளைப் பொறுத்தவரை, பருவம் தப்பிய மழையால், அறுவடை முற்றாகப் பாதிக்கப்படும் நிலையை எதிர்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையாகப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இந்த விவசாயிகளுக்கு நிவாரணம், மானியம் பற்றிய விடயம் வடமாகாண சபை அமர்வின் மேலான அக்கறைக்குரிய ஒரு விடயமாகும்.

இராணுவம் கட்டாக்காலியான கால்நடைகளில் இருந்து பால் கறந்து விற்பதைத் தடுக்க பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

உண்மையில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் இருந்து இழந்த கால்நடைகளின் உண்மையான புள்ளிவிபரங்களைத் திரட்டிக் கொண்டு, அவற்றைக் கால்நடை உரிமையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வடக்கு மாகாண சபை ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டதா?

வடக்கு மாகாண சபை இறுதி அமர்வின் அனைத்துப் பிரேரணைகளையும் நோக்கும் போது, அவை தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மையைக் கொண்டுவரக் கூடாது என்ற நோக்கில் திட்டமிடப்பட்டிருக்கின்றன. அல்லது, அரசுடன் எதையும் சாத்தியமாக்கிக் கொள்ள முடியாத வகையில் அவை முன்மொழியப்பட்டிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

இது வெறும் தற்செயலான விடயமன்றி, வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்கள் நிரந்தரமாகவே தமக்கிடையிலான உறவுகளை முறித்துக் கொள்ளும் நோக்கில் முன்மொழியப்பட்டவையாகத் தெரிகின்றன.

அதுதான் உண்மையெனில், இதற்குப் பிறகு தமிழ் மக்கள் எங்கே போய் ஒளிந்து கொள்ள வேண்டும் என்பதையும் தமிழ்க் கூட்டமைப்பினர் தான் தெளிவுபடுத்த வேண்டும்.


# படி ஏற எடை குறையும்!

உடல் எடை அதிகமாகிவிட்டதென்று கவலைப்படுகிறீர்களா? மாடிப் படிகளில் தினம்தோறும் ஏறிச் செல்லுங்கள். உடல் எடை விரைவில் குறைந்துவிடும்.

அண்மையில் பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவு ஒன்று இதைத் தெரிவிக்கிறது. மாடிப் படிகளில் ஏறும்போது கலோரி அதிக அளவில் செலவாகிறது. இதயத்தின் செயல்திறன் அதிகமாகிறது. கால், உடல் தசைகள் வலுவாகின்றன.

முதல் மாடிக்குப் போவதற்கே லிஃப்டிற்காகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் யோசிக்க வேண்டிய தருணம் இது.





# சிதம்பராக்கல்லூரி
# CHITHAMBARA COLLEGE

## தோற்றமும் வளர்ச்சியும்

வடக்கில் வரலாற்றுப்பெருமை மிக்கது வல்வை மாநகரமாகும். இம் மாநகரத்தில் பல பெருமைகள் கொண்ட வல்வையின்கண் தலைசிறந்த கல்விப்பீடமாக விளங்கி இற்றைக்கு ஒரு நூற்றாண்டு கடந்து வெற்றிநடைபோடுகின்றது சிதம்பராக்கல்லூரி. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பலர் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி இருக்கின்றனர். அவர்களை. இவ்விடத்தில் நினைவு கூர்வதோடு பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆழமாக நோக்குவோம். இக் கல்லூரியை இற்றைக்கு நூற்றிப்பதின்னான்கு வருடங்களுக்கு முன் ஸ்தாபித்த வள்ளல் பெருந்தகை கு.சிதம்பரப்பிள்ளை என்பவர் ஆவார். இவரைப்பற்றி இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

இவர் 1861 ஆம் வருடம் பிறந்தார். இலக்கண, இலக்கியங்களை கற்றுத்தேறியதோடு, ஆங்கிலம் கற்று அரச சேவையில் சேர்ந்து பணியாற்றினார். அக்காலத்தில் தான் ஆங்கிலக் கல்வியை கற்றது போல எம்மவரும் கற்க வேண்டும் எனப் பலவாறு சிந்தித்தார். இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு வல்வையிலுள்ள பெற்றோர்கள் யாவரையும் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு அழைத்து அக்கூட்டத்திலே ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தினையும், சிறப்பையும் எடுத்துக்கூறி எமது சிறார்களும் உலகுடன் உறவாட உதவும் மொழியான ஆங்கிலக்கல்வியை எமது மாநகரிலே கற்பிக்க கல்லூரி ஒன்றை ஸ்தாபிக்க உள்ளதாகவும் அதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும் என்றும் கோர, மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கவே கல்லூரி அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.இதன் காரணமாக சிறந்த நன்நாள் ஆகிய 1896 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ஆம் திகதி வல்வை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள "ஆலடியில்" சிதம்பர வித்தியாலயம் என்னும் பெயருடன் இயங்க ஆரம்பித்தது. இவ்வேளை- ஆரம்பப் பணிகளை செவ்வனே நிறைவேற்றிய அவர் 1903 ஆம் வருடம் இறைவனடி சேர்ந்தார்.

ஆரம்பத்தில் சிதம்பர வித்தியாலயம் என்னும் பெயரோடு முதன்நிலைக் கல்லூரியாக இருந்த சிதம்பரா ஒரு வருடத்தின் பின்னர் கல்வித் திணைக்களத்தினால் நன்கொடை வழங்கும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. ஆலடியில் இயங்கி வந்த பாடசாலைக்கு மாணவர் தொகை அதிகரிப்பினால் இடவசதிப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதன் காரணமாக ஆலடியில் இயங்கி வந்த இப்பாடசாலை 1912 ஆம் வருடம் ஊரிக்காட்டில் தற்போதைய நிலையத்திற்கு மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரையிலேயே நடைபெற்று வந்த இப்பாடசாலை 1923 ஆம் ஆண்டு இரண்டாம் தரக்கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் 1928 ஆம் வருடம் கேம்பிரிஜ்ட்சீனியர் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டு லண்டன் "மற்றிக்குலேஷன்" பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு ஏதுவாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்தபடியாக இப் பாடசாலை தரம் D யைப் பெற்றமையும் இங்கு குறிப்பிட வேண்டும். லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சை வகுப்புக்களைத் தொடர்ந்து சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புக்கள் 1942 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டன. சர்வகலாசாலைப் புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு போதுமான வசதிகள் 1935 ஆம் வருடமே இருந்த போதிலும் கூட 1958 ஆம் வருடத்தில் தான் இந்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலையின் வேலைத்திட்டங்களையும், சாதனைகளையும், நடவடிக்கைகளையும் உன்னிப்பாக அவதானித்த கல்வித் திணைக்களம் கல்லூரியை தரம் II என 1958 ஆம் ஆண்டு தை மாதம் தரமுயர்த்தியது. அத்தோடு மறுவருடமே தரம்I பாடசாலையாக தரமுயர்த்தி மதிப்பளித்து பாராட்டியது மட்டுமன்றி சிதம்பராக்கல்லூரி என்ற பெயரைப் பெற்று இன்று வரையும் அப்பெயரோடும் பெருமையோடும் வாழ்கின்றது.1896 ஆம் வருடம் இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட சமயம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பருத்தித்துறையைச் சேர்ந்த விநாயகம் முதலியாரும்அவரைத் தொடர்ந்து ஏ.நாகமுத்து, வீ.அருணாசலம் முகாமையாளர்களாக இருந்து கல்லூரியை வழி நடத்தி வந்துள்ளனர். 1901 ஆம் ஆண்டு தொடக்கம் 1960 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 60 ஆண்டுகளாக பாடசாலையின் முகாமையாளராக ஞா. தையல் பாகர் பணியாற்றி இருந்தார். அவரின் பணி என்றால் மிகையாகாது.



அதிபர்
கி. இராஜதுரை.
B. A, M.A, Dip in Edu.

## 2014 ஆம் ஆண்டிற்குரியஇல்ல மெய்வல்லுநர் போட்டி

சிதம்பராக்கல்லூரியின் 2014 ஆம் ஆண்டிற்குரிய இல்ல மெய்வல்லுநர் போட்டியின் சிறப்புநிகழ்வான மரதன்(ஆண்கள்) ஓட்ட நிகழ்வு நெடியகாடு படிப்பக முன்றலில் கல்லூரி அதிபர் கி.இராஜதுரையினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. மரதன் ஓட்ட நிகழ்வானது நெடியகாடு படிப்பக முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு வல்வெட்டித்தறை சந்தி, தொண்டைமானாறு சந்தி, உடுப்பிட்டி நூல்நிலைய சந்தி, உடுப்பிட்டி சந்தி, மிண்டும் வல்வெட்டித்துறை சந்தி வழியாகச் சென்று கல்லூரி முன்றலில் நிறைவுபெற்றது.பெண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு நெடியகாடு படிப்பக முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு வல்வெட்டித்துறை சந்தி வழியாகச் சென்று கல்லூரி முன்றலில் நிறைவுபெற்றது.நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



வெற்றி பெற்ற ஆண்கள் 1. ச. மதுசாந் 2. சு. குமரன் 3. நே. கீதப்பிரியன் 4. கு. வேனுஜன் 5. பொ. சதீஸ்குமார் 6. ஆ. ஆனந்த் 7. வி.விஜய் 8. இ. பிருந்தாபன் 9. மோ. மயூரன் 10. நா. பிரசாந்த்





வெற்றி பெற்ற பெண்கள் 1. சி. தமிழரசி 2. அ. கௌசல்யா 3. வி. விதுஷா 4. அ. சிந்து 5. மோ. இராஜலட்சுமி 6. ஞா. பவித்திரா 7. வி. சாளினி 8. கி. ஜெஜின்தா 9. பி.பிரியதர்சினி 10. பா. கீர்த்தனா

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் -2013

கல்லூரியின் 2012 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு மற்றும் நிறுவுனர்தின விழா (11-11-2013) அன்று திங்கட்கிழமை பாடசாலை அதிபர் கி.இராஜதுரை தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சிவபாதம் நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி) மற்றும் சிறப்பு விருந்தினராக கந்தர் பொன்னையா (கோட்டக் கல்விப் பணிப்பாளர், மருதங்கேணி) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். நிறுவுனர் தின உரையினை, சிதம்பராக்கல்லூரி பழையமாண வரும், முன்னாள் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், கொழும்பு (ஆணகள்) இந்துக்கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபரும், வடமராட்சி வடக்கு முதியோர் பேரவைத் தலைவரும், கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் உபதலைவருமாகிய சிவா.கிஷ்ண மூர்த்தி வழங்கியிருந்தார். இவ்விழாவிற்கு எமது கல்லூரி பழையமாணவர் சங்கம் அனுசர ணையினை வழங்கியிருந்தது.







# திட்டமிட்டு சூறையாடப்படும் பாலியாற்று பால அணைக்கம்பிகள்

## தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(மன்னார்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தையும் துணுக்காய் பிரதேசத்தையும் இணைக்கும் பாலியாற்றுப்பாலத்தின் அணைக்கம்பிகள் திருடர்களால் திட்டமிட்டு சூறையாடப்படுவதாக பாண்டியன் குளம் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பெரும்மழை காலங்களில் பாலியாற்றினால் பாண்டியுன் குளம் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுவந்தனர். இந்நிலையில் இம்மக்களின் பாதிப்பை கருத்தில் கொண்டு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 90 மில்லியன் ரூபா செலவில் பாலம் அமைககப்பட்டது.

இந்நிலையில் தற்போது இப்பாலத்தின் அணைக்கம்பிகள் இரவு வேளைகளில் திருடர்களால் களவாடப்படுவதாகவும் இதனால் பாலத்தின் உறுதி பலமிழக்கும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இத்திருட்டுக்கள் தொடர்பில் மாந்தை கிழக்கு பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ள போதிலும் காட்டுப்பகுதியில் இப்பாலம் அமைந்துள்ளதால் திருட்டு குறித்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றார்.

பாண்டியன்குளம் பிரதேச மக்களுக்கு முக்கிய பாலமாக காணப்படும் இப்பாலத்தின் அணைக்கம்பிகள் களவாடப்படுவதை தடுத்து பாலத்தை பாதுகாக்க உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## சிறந்த அலுவலர் தெரிவு

(மானிப்பாய்)

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சும் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன அகில இலங்கை ரீதியாக மேற்கொள்ளும் 2013 ஆம் அண்டுக்கான இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் மதிப்பீட்டில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை அலுவலர்களில் சிறந்த அலுவலராக இ.யுவராஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் .

கடந்த ஒரு வருட காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேலைத் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் தலைமைத்துவப் பண்புகள் உட்படப் பல்வேறு விடயங்களையும் கொண்டு இந்த தெரிவு இடம்பெற்றுள்ளது .

இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது. இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர்களுக்கான ஒன்றுகூடலின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சரினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். (63,48)

## பழைய மாணவர் சங்க புதிய உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் கடந்த ஞாயிற்றுக் கிழமை சங்கத்தின் தலைவரும் கல்லூரி அதிபருமான அம்பலவாணர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மீண்டும் தலைவராக அதிபர் ரி.அம்பலவாணர் தெரிவானார். உப தலைவராக க.கனகேஸ்வரன், செயலாளராக க.சியந்தன் உப செயலாளராக திருமதி. சுதர்சினி வசந்தகுமார் பொருளாளராக எஸ்.வீரசுதாகரன் தெரிவானார்கள்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக வி.செந்தூரன், ந.சிவானந்தம், பொ.குகதாசன் திருமதி. ராகினி விஜயரட்ணம் எஸ். சசிகரன பொ.சகிலன், கே.பிரதீபன், திருமதி. என். பாஸ்கரன், க. கோடீஸ்வரன், க.பிரதீபன் ஆகியோர் தெரிவானார்கள்.

போசகராக நாகேந்திரன், கணக்காய்வாளராக திருமதி. சுகிர்ஜினி சர்வேஸ்வரன் ஆகியோர் தெரிவானார்கள். (48)

## கார்த்திகை உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திரபுரம் வேம்படி கந்தசுவாமி ஆலய கார்த்திகை உற்சவம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

ஆலய குரு வேதாரணிய சர்மா தலைமையில் விசேட அபிஷேகம் பூசை வழிபாடுகள் என்பன இடம்பெறுவதுடன் சுவாமி உள்வீதி வலம் வருதலும் இடம்பெறவுள்ளது. (இ)

வெள்ளி நற்சிந்தனை...



## பூனை கண்ட கிளி

கல்வியின் சிறப்பு என்பது அடக்கத்திலே தான் இருக்கிறது. இதனை அறியாமல் சிலர் மனம் விரும்பியபடி எல்லாம் பேசுகின்றனர். அது அவர் அறியாமையைத் தான் காட்டும். கற்றோர் அவை முன்னர் பணிவு வேண்டும் பணிவின்றி வாய் திறந்தால் வருவது இழிவு தான்.

கிளி வளர்ப்பார்கள் பெண்கள். அதற்குப் பாலும் பழமும் வைத்துப் பேசவும் கற்றுக் கொடுப்பார்கள். அதுவும் ஒன்றிரண்டு சொற்களைப் பேசக்கற்றுக் கொள்ளும், அந்த ஒன்றிரண்டு சொற்களைப் பேசத் தெரிந்ததும் அதற்கு அளவு கடந்த மகிழ்ச்சி பிறந்து விடும். தனக்கு எல்லாமே தெரிந்து விட்டது போலத் தன் அறியாமையை உணராமல் வெட்கமின்றிப் பேசிக் கொண்டே இருக்கும்.

ஆனால் அவ்விடத்தே பெரிய பூனையொன்று வருகிறதென்று வைத்துக் கொள்வோம். கிளியின் பேச்சு அறவே நின்று விடும். தன் நிலைமை அப்போது தான் அதற்கு வெளிப்படும். தன் பேச்சுப் பூனையைக் கொண்டு வந்தது என்பதும் புரியும் உடனே தன் இயல்பான தன்மை தோன்றக் 'கீச்சுக் கீச்சு" என்ற உயிருக்குப் பயந்து கதறத் தொடங்கி விடும்.

இப்போது பலர் இப்படித்தான் இருக்கின்றார்கள்: இந்த அருமையான கருத்தை நம் ஔவைப்பாட்டி பின்வரும் செய்யுளில் அழகாகக் கூறியுள்ளார்.

**காணமல் வேணதெல்லாம் கத்தலாம் கற்றோர் முன்**
**கோணாமல் வாய் திறக்கக்கூடாதே- காணாமல்**
**பேச்சுப் பேச்சென்னும் பெரும் பூனை வந்தாக்கால்**
**கீச்சுக் கீச்சென்னும் கிளி.**

'கற்ற பெரியோரைக் காணாவிடத்தில் அரைகுறை அறிவுடையோன் தான் விரும்பின படியெல்லாம் கூச்சல் இடலாம். ஆனால் படித்தவர்கள் முன்பாகப் பணிவின்றி எவருமே தம் வாயைத் திறத்தல் பொருந்தாது. வெட்கமின்றிப் பேசிக்கொண்டிருக்கும் கிளியானது பெரிதான பூனை அந்தப்பக்கமாக வந்தால், தன் பேச்சை மறந்து உயிருக்கு நடுங்கிக் கீச்சுக் கீச்சென்று கதறும், ஆன்றோர் அவையிடத்து, அறியாமல் பேசும் செருக்குடையவர் கதியம், அந்தக்கிளியைப் போன்றது தான்."
என்பது இச்செய்யுளின் பொருள் ஆகும்.

அறம் அறிந்து நடப்போம்: அறிவைப் பெருக்குவோம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**



## பதிவிருக்கப் பெட்டகம்

**ஒருவர்:** கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டால் இல்லை என்கிறான் ஐயா!

**இன்ஸ்பெக்டர்:** ஏன்ரா அப்படிச் சொன்னியா?

**இரண்டாமவர்:** ஆமாம் சொன்னேன். அவன் கொடுத்த பணத்தைச் செலவழிச்சிட்டேன். அந்தப் பணத்தை எப்படி "இருக்கு' என்று சொல்ல முடியும்?

*** *** *** ***

**டாக்டர்:** உங்கள் கணவரிடம் அதிர்ச்சியான செய்தி எதுவும் சொல்ல வேண்டாம்.

**பெண்:** அப்போ நான் ஆஸ்பத்திரி பில்லை அவரிடம் காட்டவா, வேண்டாமா டாக்டர்?

*** *** *** ***

**வந்தவர்:** முன் பல் ஆடுது டாக்டர்...

**டாக்டர்:** எப்போ இருந்து..?

**வந்தவர்:** இப்பதான்... நீங்கள் வாயைத் திறந்து பேசுற போது கவனிச்சேன்...

*** *** *** ***

"இருந்தாலும் உங்கள் பெண்ணுக்கு வாய் ரொம்ப நீளம்"
"இல்லையே எல்லாருக்கும் இருக்கும் அளவுதானே இருக்கு"

*** *** *** ***

"என் பொண்ணு பின்னாலே சுத்தாதே என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்?"
"கரெக்டா தெரியாது... சுமாரா முன்னூறு முறை இருக்கும்."

*** *** *** ***

"சட்டம் சம்பந்தப்பட்ட எந்தக் கேள்வியையும் இவரிடம் கேட்கலாம்!"
"பெரிய வழக்கறிஞரோ?"
"இல்லை. படங்களுக்கு ஃபிரேம் போடுற கடை வைச்சிருககிறார்!"

*** *** *** ***

**ஆசிரியர்:** பரீட்சை மண்டபத்திலே ஏன்ரா தூங்குறாய்?

**மாணவன்:** பதில் தெரியாமல் இருந்தால் முழிச்சுக் கொண்டு இருக்காதே என்று அப்பா சொன்னார்.

*** *** *** ***

"இந்தாள் ஒரு அகராதி பிடிச்சவன்... விதண்டாவாதி என்று எப்படிச் சொல்லுறாய்?"
"உயர வேண்டுமானால் பணிவு வேண்டும் என்று சொன்னதுக்கு... ஏன் ஏணி தேவையில்லையா என்கிறான்"

*** *** *** ***

"எந்த ஒரு விஷயத்தையும் முட்டாளிடம் உடனே சொல்லக் கூடாது... ஏன் தெரியுமா?"
"ஏன்? "
"நாளைக்குச் சொல்றேன்"

*** *** *** ***

"தம்பி, ஒவ்வொரு நாளும் ரோஜாப்பூ வாங்குவியே... ஏன்... கொஞ்சநாளாய் வாங்க வருவதில்லை?"
"கல்யாணமாயிட்டுது... அதுதான்"
"கல்யாணமானால் நிறையப் பூ வாங்கோணும்? நீ வாங்கிறதையே நிப்பாட்டிட்டியே"
"பூ வாங்கிக் கொடுத்தால் அவள் புருஷன் அடிக்க வரமாட்டானா?"

*** *** *** ***

**இளைஞன்:** நாம.. ரெண்டு பேரும் ஓடிப் போகலாமா...

**இளம்பெண்:** செருப்பு பிஞ்சிடும்.

**இளைஞன்:** அப்ப வேண்டாம், நடந்தே போகலாம்.

*** *** *** ***


"ஹலோ, ஹேமாவா?"
"இல்லை அவள் அப்பா"
"ஓ! மாமாவா?"

*** *** *** ***

"மணி...! "ஐ டோன்ட் நோ' என்றால் என்ன?"
"எனக்குத் தெரியாது!"
"அடப்பாவமே...உனக்கும் தெரியாதா?"

*** *** *** ***

"நண்பா, என்னிடம் ஒரு நல்ல செய்தியும், ஒரு கெட்ட செய்தியும் இருக்கிறது. நல்ல செய்தி என்னவெனில் என்னிடம் எந்த கெட்ட செய்தியும் இல்லை. கெட்ட செய்தி என்னவெனில் என்னிடம் எந்த நல்ல செய்தியும் இல்லை. இது உனக்கு நல்ல செய்தியா கெட்ட செய்தியா?"





பண்ணை-ஊர்காவற்றுறை வீதி இரண்டாம் கட்ட புனரமைப்பு பணிகள் மண்டைதீவுச் சந்திக்கு அப்பால் நடை பெற்று வருவதனை காணலாம்.

(படங்கள்-பார்த்திபன்)

# சந்திரிக்கா செய்த துன்பங்களை மக்கள் மறந்து விடவில்லை

## மெத்தேகம சமிததேரர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா இழைத்த துன்பங்களை மக்கள் மறந்துவிடவில்லை என முன்னாள் மாகாணசபை உறுப்பினரான பெத்தேகம சமித தேரர் தெரிவித்துள்ளார்.

அக்மீமன பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்

சந்திரிக்கா தமது குடும்பத்தை அழித்தது மட்டுமன்றி ஜனநாயகத்தையும் சீர்குலைத்துள்ளார். சந்திரிக்கா பொது ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட கனவு காண்கின்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு சந்திரிக்கா துரோகம் இழைத்தார். ஜனாதிபதியை இழிவுபடுத்த எவருக்கும் அனுமதியளிக்க முடியாது என்றார்.

# 2 கோடி பெறுமதியான பழைய செப்பு மீட்பு

(கொழும்பு)



சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த பழைய தாமிரம் (செப்பு) அடங்கிய இரண்டு கொள்கலன்களை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இரண்டு கோடியே இருபத்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான பழைய தாமிரம் (செப்பு) குறித்த கொள்கலன்களில் இருந்துள்ளது. ஆடைத் தொழிற்சாலை பொருடகள் என்ற போர்வையில் குறித்த கொள்கலன்கள் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்தன.

இது குறித்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# முகநூலில் புகைப்படம் மாணவி தற்கொலை


(கொழும்பு)

முகநூலில் பிரசுரமான புகைப்படம் ஒன்று காரணமாக குருநாகல் பிரதேசத்தில் மாணவியொருவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

முகநூலில் பிரசுரமான புகைப்படம் காரணமாக மன வேதனை அடைந்த குறித்த மாணவி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 வயது பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

முகநூலில் பிரசுரமான புகைப்படம் தொடாபில் பாடசாலையின் அதிபர் பெற்றோரை




அழைத்து விளக்கம் கோரியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த மாணவி வீட்டில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைப்பது தலைமைத்துவ சபையால் இயலாது

## முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஆரூடம்

(கொழும்பு)

தலைமைத்துவ சபையால் ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைக்க முடியாது என்று முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணிஷிரால் லக்திலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ரணில் விக்ரமசிங்கவும், திஸ்ஸஅத்தநாயக்கவும், மங்கள சமரவீரவும் இணைந்து எங்களை ஓரங்கட்ட முயற்சிக்கின்றனர். அவர்கள் வெட்ட நினைப்பது எங்களுடைய வால்களை அல்ல கட்சியின் வாலைத்தான். கரு ஜயசூரியவுக்கு ஆதரவாக செயற்பட்ட நாம் தற்போது வெளியில் இருக்கின்ற நிலையில், தலைமைத்துவ சபையின் தலைவராக அவர் இருக்கின்றார் என்றார்.

# பாவனைக்குதவாத பொருட்கள் திடீர் சோதனையில் சிக்கின



(கொழும்பு)

சுகாதார அமைச்சும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேசிய உணவு வாரத்தை முன்னிட்டு, மன்னார் நகரப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது பாவனைக்குதவாத உணவுப் பொருடகளை கைப்பற்றியதாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.என்.கில்றோய் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினர் மேற்கொண்ட இந்தச் சோதனையின் போது போத்தலில் அடைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய், நெத்தலிக் கருவாடு, சோயாமீட் பைக்கட்டுக்கள், நூடில்ஸ், ரின் மீன்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறான சோதனைகள் திடீர், திடீரென்று மேற்கொள்ளப்படும். இதன் போது பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் காணப்படின் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திரிபோஷா நிறுவன தரக்கணிப்பாளர் நீக்கம்

(கொழும்பு)

இலங்கை திரிபோஷா நிறுவனத்தில் தரக்கணிப்பாளர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட திரிபோஷா தொகையை ஆய்வுக்கு உட்படுத்தாது அழித்த சம்பவத்தை அடுத்து அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

உற்பத்தியின்போது ஏற்பட்ட கோளாறு எனக்கோரி 6000 திரிபோஷா பைக்கற்றுக் கள் கோழிக்கு உணவாக வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்ப டுகிறது. எனினும் கோழிக்கு வழங்கப்பட்ட திரிபோஷா தரமானது என பரிசோதனையில் உறுதியானதால் திரிபோஷா நிறுவனத்தில் தரக்கணிப்பாளர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# அடையாளம் காணப்பட்டது கிளிநொச்சி சடலம்



கடந்த வாரம் கிளிநொச்சி முறுகண்டி அக்கராயன் வீதியில் அமைதிபுரம் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஆணின் சடலம் இனங்காணப்பட்டது.

கரந்தவாரம் குறித்த காட்டுப் பகுதியில் பொதுமக்களால் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட சடலம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்ததோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த இரண்டாம் திகதி குறித்த சடலம் கேகாலை இக்கிரியாகல இல 111 பாடசாலை வீதியைச் சேர்ந்த 31 வயதுடைய டி.ட.பிள்யூ.ஜி. ரஞ்சித் பண்டார மாரப்பன எனும் ஒப்பந்ததார்ருடையது என அவரது மாமனார் அபேய சாந்த குமாரவினால் அடையாளம் காணப்பட்டது.

இவர் ஒரு ஒப்பந்ததாரர் எனவும் குறித்த பகுதியில் கிரவல் அகழ்வு ஒப்பந்தத்தை பெற்றிருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு குறித்த நபர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டதாக சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் சிவரூபன் தனது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்துள்ளார். (29)

க.பொ.த. (சா/த)

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

# கல்வி முரசு

## தொடர்பாடல் ஊடகக் கற்கை

ப.இராஜேஸ்வரன்

01) பின்வரும் கூற்றுகளில் வெகுசன தொடர்பாடல் இயல்பை பிரதி பலிக்காதது
1) வெகுசன ஊடகத்திற்கு உயர் தொழிநுட்பம் தேவை
2) வெகுசன ஊடகம் முழு உலகையும் உள்ளடக்குகின்ற போது பூலோக வெகுசன ஊடகமாக மாற்றம் பெறுகின்றது
3) பொதுவாக ஊடக பாவனைக்கு ஊடக அறிவு அவசியம்
4) நேருக்கு நேர் இடம் பெறுகின்ற தொடர்பாடல் செயன்முறைக்குட்பட்டது

02)செவிப்புலத் தொடர்பாடல் வகையை சேர்ந்தவை
1) ஒலிப்பேழைக்கருவி ஒலிநாடா இயந்திரம் ஒலிபெருக்கி
2) ஒலிபெருக்கி கணணி ஒலிநாடா
3) ஒலி நாடா தொலைக்காட்சி கணணி
4) மல்ரிமீடியா ஒலிப்பேழைக்கருவி ஒலிப்பெருக்கி

03) பின்வரும் கூற்றுகளில் முறைசாரா தொடர்பின் இயல்பினை பிரதிபலிக்காத கூற்று
1) முறைசாரா தொடர்பாடல் முறைசாரா வழிகளில் ஒழுங்கின்றி செல்லும்
2) முறைசார் தொடர்பாடலினால் கிடைக்காத தகவல்கள் முறைசாரா தொடர்பாடல் மூலம் கிடைக்கும்
3) முறைசார் தொடர்பாடலை விட முறைசாரா தொடர்பாடல் வேகம் குறைந்தது
4) முறைசார் தொடர்பாடல் பலவீனம் அடையும் போது முறைசாராத் தொடர்பாடல் பரவுகின்றது

04) தொடர்பாடலில் செய்தியை கொண்டு செல்வது (கடத்துவது)
1) ஊடகம் (அலைவரிசை) 2) தொடர்பாடுபவர்
3) தனிநபர் 4) தனிநபர் அல்லது குழு

05) குமாருக்கு ஊடகத்தை விமர்சனம் செய்யும் ஆற்றல் உண்டு ஆனால் அவற்றை பயன்படுத்துவதில்லை அதேவேளை சிறுசிறு குழுக்களில் அவ் ஆற்றலை வெளிப்படுத்தும் தன்மை உடையவன் ஆகவே அவர்
1) மந்த பெறுநர் 2) தொடர்பாடுபவர்
3) தனிநபர் 4) தனிநபர் அல்லது குழு

06) சிறுவர்களும் வானொலி ஊடக பயன்பாடு தொடர்பான கூற்றுக்கள் பின்வருமாறு
A. வானொலியை விட தொலைக்காட்சி ஊடகத்தை சிறுவர் அதிகம் பயன்படுத்துகிறார்கள்
B. வானொலி ஊடகத்தினால் சிறுவர்களிடம் பேச்சுத்திறன் அதிகரிக்கும்
C. செவிமடுத்தல் திறன் சிறுவர்களிடையே அதிகரிக்கும்
D. காட்சி ரீதியான அனுபவத்தை பெறமுடியும

மேற்குறிப்பிட்ட கூற்றுகளில்
1) A,B,C ஆகியன மாத்திரம் சரியானவை
2) A,C,D ஆகியன மாத்திரம் சரியானவை
3) B,C,D ஆகியன மாத்திரம் சரியானவை
4) A,B,C,D எல்லாம் சரியானவை

07) விழிப்புணர்வு மிக்க பெறுநர் என்பவர்

அ) பெறுநரை தூண்டும் நுட்பமுறைகளை விளங்கும் ஆற்றல்
ஆ) ஊடகக் கொள்கையை உய்த்தறியும் ஆற்றல்
இ) ஊடக நிகழ்ச்சிகள் அனைத்தையும் இரசித்தல்
ஈ) ஊடக முன் வைப்புகளை முழுமையாக நம்புதல்
உ) ஊடக ஆய்வு விமர்சன ஆற்றல் மிக்கவர்
மேற்குறிப்பிட்ட கூற்றுகளில் பொருத்தாமானது

1) A,D,E ஆகியன மாத்திரம் சரியானவை
2) B,C,D ஆகியன மாத்திரம் சரியானவை
3) B,D,E ஆகியன மாத்திரம் சரியானவை
4) A,B,E ஆகியன மாத்திரம் சரியானவை

08) ரவி பாடசாலைக்கு செல்லும் போது வீதிச்சமிஞ்சைகளை அவதானித்து கொள்வான் இச் செயன்முறையுடன் தொடர்புபட்ட மொழி
1) கட்புல மொழி 2) கட்புல செவிப்புல மொழி
3) எழுத்து மொழி 4) பேச்சு மொழி

09) யதார்த்த நிலைகளை ஆக்கபூர்வமாக கலையம்சங்களுடன் வெளிப்படுத்தும் கலை என்பது விபரண திரைப்படதன்மையாக அமைகின்றது பின்வரும் கூற்றுகளில் விபரண. பட இயல்பை பிரதிபலிக்காத கூற்றுக்கள்

A. இயக்குனரினால் உருவாக்கப்படுகின்ற கதாநாயகன் நாயகி இல்லாதிருத்தல்
B. முழுநீள திரைப்படங்களை விட் விபரண திரைப்படங்களின் காலம் குறுகியது
C. குறித்த விடயம் தொடர்பிலான முழுமையாக தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை

1) A மட்டும் 2) C மட்டும்
3) A யும் B யும் 4) B, C ஆகியன

10) தொலைக்காட்சி வைக்கப்பட்டுள்ள இடம் இல்லத்தின் பொது இடமாக விளங்குகின்றது அன்றாட வேலை நேர அட்டவணையை தொலைக்காட்சி ஒளிபரப்பு நேரங்கள் தீர்மானிப்பவையாக உள்ளன இவை வெளிப்படுத்தும் எண்ணக்கரு
1) உலக கிராம எண்ணக்கரு
2) அபிவிருத்தி எண்ணக்கரு
3) தொலைக்காட்சி கலாசார எண்ணக்கரு
4) பொழுது போக்கு எண்ணக்கரு

11) வானொலி ஊடகத்திற்கு பிரதி ஆக்கம் செய்கின்ற போது கவனிக்க வேண்டிய கூற்றுக்களில் தவறானது ?
1) வானொலியின் ஆன்மா குரல் என்பதனால் பிரதி ஆக்கம் முழுவதுவும் ஒளிப்படங்களால் அமைதல்
2) நேயர்களின் செவிப்புலன் மனங்களுக்கு பொருந்தும் வகையில் எழுதுதல்
3) கண்களுக்கு அல்ல காதுகளுக்கு எழுதுதல்
4) சொற்கள் இசை ஒலி வழியாக செய்தி முன் வைக்கப்படுவதை விளங்கி எழுதுதல்

12) தாள்கள் தொடர்பான கூற்றுக்களில்
A- GSM 70 என்பது 1 சதர மீற்றரின் 70 கிராம் என்பதாகும்
B- செய்தித்தாள் அச்சிடுவதற்கு GSM 70 தாள் பயன்படுத்தப்படுகின்றது
C- புத்தகங்கள் அச்சிடுவதற்கு GSM 35 பயன்படுகின்றது
D- ஜி.எஸ்.எம் (GSM)என்பது ஒரு சதுரமிற்றர் தாளின் நிறையை குறிக்கும்
E- வெள்ளை தாள் எல்லாம் சமநிறையுடையவை
மிகப்பொருத்தமானது
1) A, D யும் 2) A, C யும்
3) A, C, E யும் 4) A, B,C, D ஆகியவை

13) A4 அளவில் 4 முதல் 12 பக்கங்கள் வரை மாதம் ஒரு முறை அல்லது இருமுறை நிறுவனம் ஒன்றின் தற்கால நடப்புத் தகவல்களை மக்களுக்கு அல்லது இலக்கு குழுவினருக்கு பதிப்பாகக் குழு ஒன்றினால் பிரசுரிக்கப்படுவது
1) செய்திப் பத்திரிகை 2) சுவர்ப்பத்திரிகை
3) சஞ்சிகை 4) செய்திக்கடிதம்

14) புகைப்படங்களின் பிறிதொரு விதமான தயாரிப்பே வழுக்கியில் பயன்படுத்தப்படும் புகைப்படம் வகை
1) எண்ம புகைப்படப்படலம்
2) நேர் புகைப்படப்படலம் (Positive)
3) மறைப்புகைப்படப்படலம் (Nagative)
4) வர்ண எதிர் புகைப்படலம்

15) ஊடக நிறுவன உள்ளக கட்டமைப்பு செயல் ஒழுங்குகள் ஏற்ப தொழிசார் கருமங்களுடன் தொடர்புபட்டவை
a. நிதி பாதுகாப்பு
b. பராமரிப்பு நிர்வாக சேவை
c. புகைப்பட பிடிப்பாளர் நெறியாள்கை
கூற்றுக்களில் பொருத்தமானவை
1) a மாத்திரம் 2) b மாத்திரம்
3) c மாத்திரம் 4) d மாத்திரம்

16) வகுப்பறையில் பயன்படுத்தப்படுகின்ற எறிவை ஊடகமான மேந்தலை எறிவையின் (Overhead Projector) முக்கியத்துவம் பற்றி மாணவர் சிலரின் கருத்துக்கள் வருமாறு இவற்றில் உடன்பட முடியாத கருத்து
1) மேந்தலை எறிவை முன்னாயத்தம் இன்றி பயன்படுத் தக்கூடிய ஊடகம்
2) எறிவை சார் உபகரணம்
3) ஊடுகாட்டி தாள் மூலம் குறிப்புக்கள் உருக்கள் தயார் செய்யப்படும்
4) 4 அளவில் தயார் செய்யப்படும் ஓர் ஆவணம் இரு மடங்காக பெரிதாக்க எறிவைக்குட்படுத்தப்படுகின்றது

17) பின்வரும் கூற்றுக்களின் ஆளிடைத் தொடர்பாடல் இயல்பை மிக ப்பொருத்தமாக பிரதிபலிப்பது
1) பின்னூட்டல் பலவீனமானது
2) ஊடக கருவிகள் மிக அடிப்படையானது
3) நிறுவனமயமாக்கப்பட்டரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது
4) உயர் மட்ட பின்னுட்டல் கிடைக்கும்

18) A. பத்திரிகை வெளியீட்டின் இறுதிப் பொறுப்புக்கூறல்
B. உதவி ஆசிரியர்களுக்கு பணிகளை பங்கிடுதல்
C. ஆசிரிய தலையங்கம் எழுதுதல்
D. மொழிப்பிழைகள் இலக்கணப்பிழைகளை செம்மைப் படுத்தல்

மேற்படி கூற்றுக்களில் பிரதம ஆசிரியர் ப்ணியுடன் தொடர்பு பட்டவை.
1) A யும் C யும் 2) B யும் C யும்
3) A யும் Bயும் C யும் 4) A யும் Cயும் D யும்

19) பகுதியில் உள்ள பணியாளர்களினால் ஆற்றப்படும் பணிகளை காட்டும் பகுதியின் சரியான ஒழுங்கு முறையே

A பகுதி
1) செய்தியாசிரியர்
2) முன்வைப்பாளர்
3) செம்மைப்படுத்தப்படுநர்
4) அறிவிப்பாளர்
5) ஊடகவியலாளர்
6) தயாரிப்பாளர்

B பகுதி
A தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர்
B மொழி இலக்கண திருத்தம் மேற்கொள்பவர்
C நெய்திளை சேகரித்து வழங்குபவர்
D அச்சு ஊடக முதன்மை அதிகாரி
E சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆக்கத்திறனுடன் செயற்படுபவர்
F. நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்புக்கு தயார் செய்பவர்

1) DEBACF 2) BCDEAF
3) ACDEFB 4) DEABFC

20) ஊடகத்தினால் தமக்கு என ஒதுக்கப்பட்ட துறைகளுக்கான செய்திகளை சேகரிக்கும் பணி, ஊடக நிறுவனங்களுக்கு செய்தியை வழங்குவது, அதிகாரம் பெற்ற நபர்களினால் வெளியிடப்படுவது, தினசரி சம்பவங்களை குறித்தல் ஆகிய செயன்முறையுடன் தொடர்புபட்ட தகவல் மூலகங்களை முறையே காட்டுவது.

1) செய்திக் குறிப்பு, செய்தி முகவரி, செய்தி நாட்குறிப்பேடு, பீட் அறிக்கை
2) பீட் அறிக்கை, செய்தி முகவர், செய்திக் குறிப்பு, செய்தி நாட்குறிப்பேடு
3) செய்தி நாட்குறிப்பேடு, செய்தி முகவர், செய்திக் குறிப்பு, பீட் அறிக்கை
4) பீட் அறிக்கை, செய்தி முகவர், நேர்முகம், செய்தி நாட்குறிப்பேடு

21) வெளியீட்டு உரிமை என்பது

A - ஒருவரின் உள்ளத்தில் உள்ள கருத்துக்களுக்கு வெளியீட்டு உரிமை இல்லை

B - படைப்பாளியின் முதல் படைப்புக்கு மட்டுமே வெளியீட்டு உரிமை கிடைக்கும் இரண்டு ஆக்கம் எனின் அப்படைப்புக்களுக்கு வெவ்வேறான உரிமை கிடைக்கும்.

C - அறிவுசார் சொத்து வகையைச் சேர்ந்தது.

D - எழுத்தாளர் ஒருவரின் நாவலில் இருந்து அவருக்கு அறிவிக்காமல் சில பகுதிகள் எடுக்கப்பட்டு கட்டணம் செலுத்தப்பட்ட கல்விசார் செயல மர்வுக்கு பயன்படுத்தப்பட்டமை அறிவுசார் சொத்துடமைச் சட்டத்தின் பிரகாரம் நியாயமான பயன்பாடாகும்.

மேற்கூறப்பட்டுள்ள கூற்றுக்களில் வெளியீட்டு உரிமை சார்ந்த அம்சங்க ளாகக் கொள்ளக்கூடியவை.

1) A யும் B யும் 2) A யும், B யும், C யும்
3) B யும், C யும், D யும் 4) மேற்கூறிய யாவும்

22) • மூடநம்பிக்கைகள், சடங்குகள், கிராமியக் கலைகள் மரபுரீதியான தொடர்பாடல் வடிவமாகக் காணப்படுகின்றது.

- உருக்கள், சுவரொட்டிகள், குறியீடுகள் , வரைபுகளும் இத் தொடர்பாடல் வடிவச் செயன்முறைக்கு பயன்படுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புபட்ட தொடர்பாடல் வடிவம்

1) கட்புல தொடர்பாடல் வடிவம்
2) கட்புல செவிப்புல தொடர்பாடல்
3) வாய்மொழியற்ற தொடர்பாடல்
4) எழுத்து மூல தொடர்பாடல்

23) சமீப காலத்தில் அகிலமயமாதல், பூகோளமயமாக்கல், சர்வதேச மயமாக்கல் போன்ற சொற்கள் முதன்மை பெற்றுள்ளன. இச்செயன்முறையுடன் தொடர்புபட்ட கூற்றுக்களாக அமையக்கூடியவை.

A - பல்வேறு ஊடகங்கள், ஒன்றிணைந்து ஒரு தொகுதியாக உருவாதல்
B - பூகோள கலாசார தொடர்பாடல் சூழல் அறிமுகமாதல்
C - குடிமக்கள் செய்தி அறிவிப்பிலும் தொடர்பாடலிலும் ஈடுபடல்
D - தகவல் முதலீட்டு (Informational Capital) பண்டமாக மாற்றமுறுதல்

1) A யும், B யும் 2) A யும், B யும்
3) A யும், C யும் 4) A யும், B யும், D யும்

24) அச்சு ஊடக நிறுவனம் ஒன்றில் பணியாளர் ஒருவர் மூலப்பிரதியுடன், அச்சுப் பிரதியை ஒப்பிட்டு பார்த்து தவறவிடப்பட்ட வாக்கியங்கள், தரவுகளை, சொற்கள் போன்றவற்றைச் சீர்திருத்தம் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இப்பணியுடன் தொடர்புடைய ஊடக நிறுவன பணியாளர் பின்வருவனவற்றில்

1) செய்தி ஆசிரியர் 2) ஒப்புநோக்குநர்
3) செம்மைப்படுத்துநர் 4) மொழி பெயர்ப்பாளர்

25) திரைப்பட கருப்பொருளுக்கு ஏற்ற வகையில் பின்னணி காட்சிகளை (செட்) ஒழுங்கமைப்பதிலும், நடிகர், நடிகைகளின் ஆடை, அணிகலன், தோற்றப்பாடுகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல்களிலும் ஈடுபடுபவர்.

1) கலைநெறியாளர் 2) ஒப்பனையாளர்
3) தயாரிப்பாளர் 4) இயக்குநர்

26) வெகுசன ஊடகத்தில் விளம்பரங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. அச்சு ஊடகம் ஒன்றில் விளம்பரம் ஒன்றிற்காகக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளுடன் தொடர்புபடாத அம்சம்

1) விளம்பரத்தின் உள்ளடக்க நிறம்
2) விளம்பரத்தின் அளவு
3) விளம்பரம் இடம்பெறும் பக்கம்
4) விளம்பரத்தின் உள்ளடக்கத் தன்மை

27) ஊடக ஆய்வு அறிக்கை தயாரிப்பில் மூன்றாவதுபடி நிலையாக அமைவது

1) தரவு சேகரித்தல்
2) ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற சனத்தொகையை தீர்மானித்தல்.
3) விளம்பரம் இடம்பெறும் பக்கம்
4) விளம்பரத்தின் உள்ளடக்கத் தன்மை

28) புகைப்படக்கருவியில் ஒளியின் தீவிரத்தை குறைப்பதற்கு நேரத்தையும், ஒளி உட்புகும் அளவையும் தீர்மானிப்பது

1) ஷட்டர், அபெர்ச்சர்
2) வில்லை, ஷட்டர்
3) அபெர்ச்சர், பிளாஷ்
4) ஷட்டர், மென்படலம்

29) முறைசாரா தொடர்பாடல் செயன்முறையை மிக ஆழமாக ஆராய்கின்ற போது பின்வரும் தகவல்கள் அறியப்பட்டிருந்தன.

A - முறைசார் தொடர்பாடலை விட முறைசாரா தொடர்பாடல் வேகமானது
B - சட்ட ரீதியாக, திட்டமிட்ட செயல் ஒழுங்கை கொண்டமைந்தது.
C - பொதுவாக முறைசார் தொடர்பாடல் பலவீனம் அடைகின்றபோது முறைசாரா தொடர்பாடல் பரவுகிறது.
D - குறித்த ஒரு நோக்குடன் கூடிய செயல் ஒழுங்கு
E - முறைசாரா வழிகளில் ஒழுங்கின்றி செல்லும்

மேற்குறித்த தகவல்களிடையே

1) A,B,D ஆகியன மாத்திரம் உண்மையானவை, அதேவேளை C,E ஆகியன பொருத்தமற்றவை.
2) A,C,E ஆகியன மாத்திரம் உண்மையானவை, அதேவேளை B,D பொருத்தமற்றவை.
3) B,C,D ஆகியன மாத்திரம் உண்மையானவை, அதேவேளை யுஇநு பொருத்தமற்றவை.
4) D,C,E ஆகியன மாத்திரம் உண்மையானவை, A, B பொருத்தமற்றவை.

30) கூட்டத் தொடர்பாடலின் போது முன்னாயத்தம் இன்றி பயன்படுத்தக்கூடிய ஊடகக் கருவிகள் கொண்ட தொகுதி

1) கரும்பலகை, பல்லூடகம், மேந்தலை எறிவை
2) மேந்தலை எறிவை, பக்கபிரட்டி, துரித எறிவை
3) வெண்பலகை, மேந்தலை எறிவை, வழுக்கி
4) துரித எறிவை, காந்தப்பலகை, கரும்பலகை

31) தொடர்பாடல் பற்றிய சில கூற்றுக்கள் பின்வருமாறு

A - தொடர்பாடல் இயங்குதன்மையானது
B - தொடர்பாடல் செயன்முறை ஒரு வழிப்பாதையுடன் (one way) மட்டும் தொடர்புடையது
C - தொடர்பு செயன்முறை ஒரு வழியாகவும், இரு வழியாகவும் இடம்பெறலாம்.
D - தொடர்பாடுபவர், பெறுநர் வகிபங்கு நிலைகள் தொடர்பு நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடையும்
E - பெறுநரை குறித்த செய்தி சென்றடைகின்ற போதே தொடர்பாடல் செயன்முறை நிறைவடைகின்றது. மேற்குறித்த கூற்றுக்களில்

1) A, C மாத்திரம் சரியானவை
2) B,D மாத்திரம் சரியானவை
3) A, C, D மாத்திரம் சரியானவை
4) A, C, D,E மாத்திரம் சரியானவை

32) சினிமா ஊடகத்தில் புகைப்படப்பயன்பாடாக அமைவன

A - சினிமா படம் தொடர்பான பதிவுகளை இரசிகரிடம் உருவாக்குவதற்கு
B - சினிமா தொடர்பிலான விளம்பர பயன்பாட்டுக்கு
C - சினிமா தொடர்பான விமர்சன, இரசனை தேவைகட்கு
D - சினிமா புத்தகம், சஞ்சிகை மற்றும் சினிமா இலக்கிய வெளியீட்டுக்கு

மேற்குறித்த கூற்றுக்களுள் உண்மையானவை

1) சினிமா தொடர்பிலான விளம்பர பயன்பாட்டுக்கு
2) A, C உண்மையானவை B, D பொய்யானவை
3) A, D உண்மையானவை B, C பொய்யானவை
4) A, B, C, D ஆகியன எல்லாம் உண்மையானவை

33) எண்மான புகைப்படப்பிடிப்பு (Digital Photography) ஒரு இலகுவான வழிமுறையாகும். இதற்கான காரணிகளாக அமையக்கூடியவை

A - கணனி மென்பொருளை கொண்டு செம்மையாக்கலை மேற்கொள்ள முடிதல்.
B - மின்நினைவக அட்டையை பயன்படுத்தி ஒளிப்படங்களை சேர்த்து வைக்கலாம்.
C - தேவையான தேவையற்ற ஒளிப்படங்களை அழிக்க முடியாது.
D - அச்சு ஊடக, மின்னஞ்சல் வழியாக தொடர்பாடலுக்கு இலகுவாக பயன்படுத்த முடியாதிருத்தல்

# மக்களின் பிரச்சினைகளை தீர்க்க சிறப்பாக பணியாற்றும் மத்தியஸ்தர் சபை

## கரைச்சிப் பிரதேச செயலர் தெரிவிப்பு



மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பணியில் மத்தியஸ்த சபை சிறப்பாக பணியாற்றுகின்றது என கரைச்சிப் பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்த சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 6 உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு இந்நிய மனங்களை வழங்கி உள்ளது.

தற்போது கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்த சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்த சபை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் கூடி வருகின்றது.

இப்பிரதேச மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக இவை இயங்கி வருகின்றன. இதனை மேலும் பலம் சேர்க்கும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமலராசா, தலைமைப்பீட கிராம அலுவலர் கனகையா மகேந்திரன், கிராம அலுவலர்கள், ஏனைய வெளிக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இளைஞர் கழக சம்மேளனத்தின் நிஸ்கோ கிளை குழு அமைப்பு

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் நிஸ்கோ கிளைக்குழு அமைக்கப்படவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கூட்டுறவு வங்கியான நிஸ்கோ மூலம் சேமிக்க முடிவதுடன் சுயதொழிற் கடனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் நிஸ்கோ அமைப்பில் 15 வயது முதல் 35 வயது வரையான இளைஞார் யுவதிகள் இணைய முடியும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் இவ் நிஸ்கோ கிளைக்குழுவானது நாளை சனிக்கிழமை அமைக்கப்படவுள்ளது.


இதற்கான கூட்டமொன்று அன்றையதினம் மாலை 3.00 மணிமுதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மணடபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறும் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆர்.நவசக்தியா கேட்டுள்ளார். (48)

# சமூக சேவைகள் அலுவலக கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி நடராசா தசரதராஜ குமாரன் தலைமையில் நடத்தப்பட்ட நிகழ்வில்முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் அலுவலகத்திற்கான அடிக் கல்லை நாட்டிவைத்தார்.



வட மாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் முலலைத்தீவு மாவட்ட பொறியியலாளர் எஸ்தரு நாமம், துணுக்காய் பிரதேச செயலக பிரிவு சமூக சேவைகள் அதிகாரி தி.கணேஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு நகரப் பிரதேசத்திலுள்ள கோயில் குடியிருப்பு என்னுமிடத்தில் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க இந்த நிலையம் அமைக்கப்படுகின்றது.

யுனிசெவ் அமைப்பு இந்த மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் முதல் கட்ட கட்டுமான வேலைகளுக்காக 2 மில்லியன் ரூபா நிதியை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது.

வறிய மக்களுக்கு வினைத்திறனுள்ள துரித சேவையை வழங்க மாவட்ட சமூக சேவைகள் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (90)

# இளைஞர் நாடாளுமன்றத்தின் ஆறாவது அமர்வு

சிறிலங்கா யூத் 2 ஆவது இளைஞர் நாடாளுமன்றத்தின் ஆறாவது அமர்வு இடம்பெறவுள்ளது. இவ் 6 ஆவது செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் அமர்வில் சமாதானம், அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தற்போதைய இளைஞர் தலைமுறை ஊடான சவால்கள் மற்றும் புதிய வாய்ப்புக்கள் என்னும் தலைப்பில் விவாதிக்கப்படவுள்ளது.

இவ் அமர்வுகளின் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்துகொள்வார்.

இளைஞர் நாடாளுமன்ற அமர்வுகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

அமர்வுகளில் பங்குபற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு மகரகம ஸ்ரீலங்கா யூத் மத்தியஸ்தானத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விவாதிக்கும் குழுக்கள் உடனடியாக அமைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். (48)

# நன்நடத்தையில் இணைக்க உத்தரவு

கிளிநொச்சி பகுதியில் பெற்றோரினால் கைவிடப்பட்ட நிலையில், குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த 14 வயது சிறுவனை யாழ். அச்சுவேலியிலுள்ள நன்நடத்தை பாடசாலையில் இணைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்நடத்தை அதிகாரிக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் சிறு சிறு திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த மேற்படி சிறுவனை, கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்நடத்தை அதிகாரி எம்.முத்துக்குமார் கடந்த வாரம் அடையாளங்கண்டு, அச்சிறுவனை யாழ். போதனா வைத்தியசாலையில் மருததுவச் சான்றிதழ் பெறுவதறகாக அனுமதித்தார். தொடர்ந்து சிறுவனையும், அவனுடைய மருத்துவச் சான்றிதழையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தியபோதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

# தொலைத்தொடர்பு நிலையத்தில் திருட்டென முறையீடு

யாழ். பரமேஸ்வரா வீதியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் 150,000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். குற் றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ.எ.எல்.விக்கிரமராட்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் நிலையத்தின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உரிமையாளர் நேற்றுமுன்தினம் அதிகாலை நிலையத்திற்கு சென்றபோது, நிலையத்தின் முன்கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்து கைத்தொலைபேசிகள், மடிக்கணனி, பாடல் ஒலிபரப்பும் பெட்டி உள்ளிட்ட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன என உரிமையாளர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.




வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் வசதி குறைந்த மக்களுக்கான நடமாடும் சேவையொன்று அண்மையில் நடாத்தப்பட்டது. தம்பசிட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடாத்தப்பட்ட இம் மருத்தவ முகாமில் வைத்திய கலாநிதி இராசதுரை நிசாந்தன் சிகிச்சை வழங்குவதைக் காணலாம். (01)

# உணவு கையாளும் நிலையங்களில் கொடிகாமத்தில் திடீர் பரிசோதனை

(சாவகச்சேரி)


உணவு பாதுகாப்பு வார்த்தை முன்னிட்டு கொடிகாமம் பகுதிகளில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் குறைபாடுகள் காணப்பட்ட உணவகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதாக கொடிகாமம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஜெ.றொனால்ட் தெரிவித்தார்.

கொடிகாமம் நகர்ப்பகுதியிலுள்ள 14 உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் சிறு குறைபாடுகள் காணப்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் கடந்த 31 ஆம் 1 ஆம் திகதிகளில் இத்திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### வலுத்தது மீனவர், தெலுங்கானா பிரச்சினைகள்

# இந்திய மக்களவை, ராஜ்யசபா

# இரண்டாவது நாளாக முடக்கம்



தமிழக மீனவர் பிரச்சினை, தெலுங்கானா பிரச்சினை ஆகிய வற்றை முன் வைத்து உறுப்பி னர்கள் அமளியில் ஈடுபட்டதால் இந்தியாவில் இரு அவைகளும் நேற்று அமளியால் முடக்கி யது. நேற்றுக் காலை மக்களவை கூடியவுடன், ஒன்றுபட்ட ஆந்திர கோரிக்கையை வலியுறுத்தி ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபாநாயகர் இருக கையை நோக்கி குவிந்தனர். இதே போல், இலங்கை கடற்படை யினரால் கைது செய்யப்பட்ட தமி ழக மீனவர்களை விடுவிக்க நட வடிக்கை எடுக்கக் கோரி தி.மு.க எம்.பி.க்களும் அமளியில் ஈடு பட்டனர்.

இதனால் அவையை முத லில் பகல் 12 மணி வரைக்கும் ஒத்தி வைக்க சபாநாயகர் உத்தரவிட்டார். மீண்டும் அவை 12 மணிக்கு கூடிய போதும் அமளி நீடித்ததால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப் பட்டது.

மாநிலங்களவையிலும், தெலுங்கானா, தமிழக மீனவர் கள், அருணாச்சல் மாணவர் மீது தாக்குதல் போன்ற பிரச்சினை கள் எழுந்தன.

ராஜ்யசபா கூடியவுடன், டில் லியில் அருணாச்சல் மாணவர் இனவெறி தாக்குதலுக்கு உள் ளான சம்பவம் குறித்து விவா திக்க பா.ஜ.க அனுமதி கோரி யது. பா.ஜ.க உறுப்பினர் ரவிசங கர் பிரசாத்துக்கு, அவைத் தலைவர் ஹமீத் அன்சாரி அனு மதி வழங்கினார். ஆனால், அ.தி.மு.க உறுப்பினர்கள் அவை நடுவே சென்று, தமிழக மீனவர்கள் பிரச்சினையில் மத்திய அரசு நடவடிக்கை கோரி கோஷம் எழுப்பினர்.


தெலுங்கானா பிரச்சி னையை எழுப்பி ஆந்திர மாநிலத தைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவை நடுவே குவிந்தனர்.

அப்போது குறுக்கிட்ட அவைத் தலைவர் ஹமீத் அன்சாரி, மரணத்துக்கு கூட அவையில் மரியாதை கிடையாதா? என்றார்.

ஆனாலும் அமளி தொடர்ந்த தால் அவை முதலில் 12 மணி வரைக்கும், பின்னர் 2 மணி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

## உலகச் செய்திகள்

# தங்கச் சுரங்கத்தில் தீ விபத்து உயிருடன் புதைந்தனர் 9பேர்



தென்னாபிரிக்காவில் 2 கிலோ மீற்றர் ஆழ தங்கச் சுரங்கத் துக்குள் உயிரோடு புதைந்துள்ளனர் ஒன்பது தொழிலாளர்கள். தென்னாப்பிரிக்காவில் ஜோகன்னஸ்பேர்க் அருகில் உள்ள தங்கச் சுரங்கத்தில் 2 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள பகுதியில் தொழி லாளர்கள் தங்கத்தை தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந் தனர்.

அப்போது அங்கு திடீர் தீவிபத்து ஏற்பட்டது. 17 தொழிலா ளர்கள் அதில் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 8 பேரை மீட்பு படையினர் மீட்டுள்ளனர்.

ஏனைய 9 தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டுள்ளனர். மிகவும் ஆழமான பகுதிக்குள் சிக்கி இருப்பதால் அவர்களின் நிலை என்ன என்று தெரியவில்லை. தீவிபத்தில் சுரங்கம் இடிந்து அந்த இடிபாடுக்குள் அவர்கள் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சுரங்கத்தின் உட் பகுதியில் புகை மண்டலமாக இருப்பதா[ல்] மீட்பு பணிகளை சரியாக செய்ய முடியவில்லை என்று மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கில் குண்டுத்தாக்குதல் 35 பேர் பலி; பலர் படுகாயம்

(பாக்தாத்)


ஈராக்கில், பயங்கரவாதிகள் நடாத்திய வெடிகுண்டுத் தாக்குத லில், 35 பேர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில், முக்கிய அரசு அலுவலகங்கள், வெளிநாட்டு தூதரகங்கள் உள்ள சாலையில், நேற்று முன்தினம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கார்களில் வெடிகுண்டுகள் வெடித்தன. இதில், அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டி ருந்த, மூன்று பொலிஸார் உட்பட, 12 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

அதே போல், நகரின் மற்றொரு பகுதியில், தற்கொலைப் படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. வெடி குண்டை உடலில் கட்டி வந்த நபர், திடீரென வெடித்து சிதறியதில், 23 பேர் பலியாயினர். இந்தத் தாக்குதல்களுக்கு, இதுவரை எந்த அமைப்பினரும் பொறுப பேற்கவில்லை. எனினும், அரசு அலுவலகங்களை குறிவைத்து தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதால், இது, அல் - கொய்தா பயங்கர வாதிகளின் சதித்திட்டமாக இருக்கலாம் என, சந்தேகிக்கப்படு கிறது.

# தலைவர்கள் வழி நடத்த தவறினால் மக்கள் தலைமை ஏற்க வேண்டும்

## கோபிஅனான் ஆலோசனை



தலைவர்கள் மக்களை வழி நடத்தத் தவறினால், மக்கள் தலைமைப்பெறுப்பேற்று தலை வர்களை வழிநடத்த வேண்டும் எனவும், தலைவர்கள் மக்களின் வழியில் செயல்பட வேண்டும் எனவும் ஐ.நா.,வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

தட்பவெப்ப நிலை, புவி வெப்பமயமாதல், பொருளா தார மாற்றங்கள் உள்ளிட்ட உல கம் எதிர்கொண்டிருக்கும் சவால கள் குறித்து கருத்து வெளியி டும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கை யில்:

நெல்சன் மண்டேலா போன்ற மூத்த தலைவர்கள் ஏழைகளின் நலன் காக்க பெரிதும் குரல் கொடுத்தனர் நாங்கள் தனித்து நின்று எங்கள் பங்கினை அளி த்து வருகிறோம்.நாங்கள் எந்த ஒரு அரசின் அங்கமும் அல்ல இருப்பினும் ஒன்று கூடி உலக நாடுகளின் பிரச்சினைகள் மற்றும் அரசுகள் செய்யும் அல்லது செய்யத் தவறிய விடயங்கள் குறித்து ஆலோசனை நடாத்து வோம் நாம் இயற்கை வளங் களைப்பாதுகாக்கத் தவறியதன் விளைவு, இன்று தட்பவெப்ப நிலையில் பல்வேறு முரண் பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கம் வெள்ளம், ஒரு பக்[கம்] வறட்சி குடிநீர், உணவு ஆகிய வற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது.

தட்டுப்பாடு மனித இனத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது படிவ எரிபொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி நாம் சுற்றுச் சூழலை மாசுபடுத்தி வருகிறோம படிவ எரிபொருட்களுக்கு வழங கப்படும் மானியங்களை நிறுத்த வேண்டும். புவியைக்காக்க இந் தியா, கானா, சீனா உள்ளிட்ட நாடுகள் பெரும முயற்சி செய்து வருகின்றன என்றார்.

# இந்தியாவின் அரசியலில் மூன்றாவது அணிக்கு இடமில்லை

## நரேந்திரமோடி தெரிவிப்பு



இந்திய அரசியலில் இருந்து மூன்றாவது அணி என்ற கருத் தாக்கத்துக்கு விடை கொடுக் கும் நேரம் வந்துவிட்டது. இந்த அணியைச்சேர்ந்த கட்சிகள் ஆட் சியில் உள்ள மாநிலங்கள் எல் லாம் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன என்று பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலை யொட்டி கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பா.ஜ.க பேரணி மற்றும் பொதுக்கூட்டத் தில் அக்கட்சியின் பிரதமர் வேட் பாளரும், குஜராத் முதல்வரு மான நரேந்திர மோடி பங்கேற் றார்.


அதில் அவர் மேலும் உரை யாற்றுகையில்:

'மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க ஆட்சி அமைக் கும். அப்போது காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை மூன்றாவது அணியினர் அறிந்து கொள்வார்கள். மூன்றாவது அணி என்ற ஏற்பாடே, இந்தி யாவை மூன்றாம் தர நாடாக ஆக்குவதற்காகத்தான் உருவாக கப்பட்டுள்ளது. நாட்டின் கிழக் குப் பகுதியில் உள்ள மாநி லங்களில் மூன்றாவது அணி யைச் சேர்ந்த கட்சிகள் ஆட் சியில் உள்ளன. அதனால்தான் அந்த மாநிலங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன. மேற்குப் பகுதியில் உள்ள மாநிலங்கள் எதிலும் மூன்றாவது அணியைச் சேர்ந்தோரின் ஆட்சி இல்லை.

தேர்தல் வரும்போதெல்லாம் மதச்சார்பின்மை, ஏழை மக் களின் நலன் போன்ற விடயங் களைப்பற்றி மூன்றாவது அணி யினர் பேசத் தொடங்கிவிடு கின்றனர். ஆனால், அவர்கள் ஆட்சியில் உள்ள மாநிலங் களில் வளர்ச்சியின் பலன்கள் முஸ்லிம்களை சென்றடையும் வகையில் செயற் பட்டதில்லை. முஸ்லிம்களை வாக்கு வங்கி யாகத்தான் அவர்கள் எப்போ தும் கருதுகின்றனர்.

குஜராத்தில் சிறுபான்மை யினரின் தனி நபர் வருமானம் மிகவும் அதிகமாக இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். அரசுக்கு அரசியல் சாச னம் மட்டும்தான் மதப் புத்தக மாக இருக்க வேண்டும். தேசிய வாதத்தில் மட்டுமே நம்பிக்கை இருக்க வேண்டும் என்றார்.

# 1இலட்சத்து 26ஆயிரம் கோடியுடன் முதலிடத்தில் அம்பானி



இந்திய கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு கடந்த 15 ஆண்டு களில் 12 மடங்கு உயர்ந்து உள்ள தாக பன்னாட்டு நிதி நிறுவனம் (ஐ.எம்.எப்.) தெரிவித்துள்ளது. அதோடு இந்தியப் பணக்காரர்க ளின் பட்டியலையும் வெளியிட்டு உள்ளது.

இதில் முகேஷ் அம்பானி முத லிடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூ.1 இலட்சத்து 26 ஆயிரம் கோடியாகும்.

இலட்சுமி மித்தல் ரூ.96 ஆயிரம் கோடி சொத்து குவித்து 2ஆவது இடத்திலும், துலீப் ஷங்வி ரூ.83,400 கோடி சொத்து குவித்து 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியலில் சிவ் நாடார் 7ஆவது இடத்தில் உள்ளார். ஆசிம் பிரேம்ஜி 4ஆவது இடத்திலும், பலோன்ஜி மிஸ்திரி 5ஆவது இடத்திலும், இந்துஜா சகோதரர்கள் 6ஆவது இடத்திலும், அதி கோத்ராஜ் குடும்பத்தினர் 8ஆவது இடத்திலும், குமார் பிர்லா 9ஆவது இடத்திலும், சுனில் மித்தல் குடும்பத்தினர் 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

# கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் பக்கச்சார்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பு

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தவிசாளரின் தன்னிச்சையான பக்கச்சார்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றைய தினம் கூட்டாக சபை அமர்வுகளிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த மாதம் 21 ஆம் திகதி சபை அமர்வின் போது ஆளும் தரப்பு உறுப்பினர் ப.குமாரசிங்கம் மற்றும் எதிர்தரப்பு உறுப்பினர் ப.இராமச்சந்திரன் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கினை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தரப்பு உறுப்பினரான இராமச்சந்திரன் மட்டும் சபை நடவடிக்கையிலிருந்து இடைநிறுத்துவதாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை. குகராசாவின் தன்னிச்சையான பக்கசார்பான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

குறித்த பிணக்கு கிளிநொச்சி பொலிஸாரிடமிருந்து கரைச்சி மத்தியஸ்த சபைக்கு மாற்றப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் இதுவரை விசாரணையில் எவ்வித தீர்ப்பும் எட்டப்படாத நிலையில் தவிசாளர் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பான தனது கட்சி உறுப்பினரான ப.குமாரசிங்கத்தை தவிர்த்து தனியே இராமச்சந்திரனை மட்டும் சபை நடவடிக்கையிலிருந்து இடைநிறுத்தும் முடிவு பக்கச்சார்பான ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்பதனை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று சபை அமர்வுகளில் கலந்துகொள்ளாமல் வெளியேறினர்.

சபை நடவடிக்கையிலிருந்து ஒரு உறுப்பினரை வெளியேற்றுவதாயின் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு பிணக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரையும் கால வரையறை குறிப்பிட்டு இடைநிறுத்தியிருக்க வேண்டும். அதுதான் ஒரு நியாயமான தவிசாளரின் பொறுப்பான நடவடிக்கை.

ஆனால் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அதை விடுத்து தனது கட்சி உறுப்பினரை பாதுகாத்து எதிர்க்கட்சி உறுப்பினரை பழிவாங்கும் வகையில் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார் என எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கூட்ட தீர்மானம் இன்றியும் கால வரையறை குறிப்பிடாமலும் தவிசாளரினால் அவசர அவசரமாக தன்னிச்சையாக முடிவெடுக்கப்பட்டு சபை கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன் இராமச்சந்திரனிடம் கடிதம் நேரடியாக வழங்கப்பட்டமை தவிசாளரின் பக்கச்சார்பான ஜனநாயக விரோதமான செயல் எனவும் பிரதேச சபையில் சிறுபான்மையாக இருக்கும் தங்களின் உரிமைகளை பெரும்பான்மையாக இருக்கும் இவர்களால் மதிகப்படுவதில்லை என்பதற்கு இது சிறந்த உதாரணம் எனவும் இவர்கள்தான் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருவதாக கூறிக் கொள்கின்றவர்கள் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் கரைச்சி பிரதேச சபை தவிசாளருக்கு நேற்றைய திகதியிடப்பட்ட NP/14/45(1)/(02)/04/02/021 இலக்கமுடைய கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

அதாவது பிரதேச சபையின் கூட்ட ஒழுங்கு விதியின் 24(1) இற்கமைய உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்துவதாயின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன் குறிப்பிட்ட இடைநிறுத்தம் முதல் தடவையாயின் ஒரு மாத காலத்திற்கு மேற்படாத வகையில் அமைந்திருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளை இராமச்சந்திரனும் தவிசாளரின் நடவடிக்கைக்கு விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

எனவே ஒழுங்கு விதிகள் மற்றும் சட்ட வரையறைகள் இவ்வாறிருக்க கரைச்சி பிரதேச சபை தவிசாளர் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் இராமச்சந்திரன் மீது எடுத்திருக்கும் நடவடிக்கையானது பக்கசார்பானதும் நியாயமற்றதுமாகும் வேண்டுமென்றே எதிர்க்கட்சி உறுப்பினரை பழிவாங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே இதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஜனநாயம், உரிமை, நியாயம் என்றெல்லாம் பேசுபவர்கள் தாங்கள் அவற்றையெல்லாம் பின்பற்றுவதில்லை என்பதற்கு இந்த சம்பவம் நல்ல உதாரணம் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (29)

# மனித உரிமைகள் விவகாரத்தை அரசியல் கருவியாக மாற்ற முயற்சி

## அமைச்சர் பீரிஸ் கண்டனம்

மனித உரிமைகள் விவகாரத்தை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்த சில நாடுகள் முயற்சிப்பதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இராணுவத்திற்கு எதிராக எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமெரிக்காவிற்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது படையினர் தொடர்பில் தவறான கருத்துக்கள் எதனையும் லலித் வீரதுங்க வெளியிடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டால் அது பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என லலித் வீரதுங்க அமெரிக்காவில் வைத்து குறிப்பிட்டதாகவும், இதன் மூலம் படையினர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக லலித் வீரதுங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகளே குறிப்பிடாத நிலையில், ஜனாதிபதியின் செயலாளரே குற்றச்செயல்கள் இடம்பெற்றதாக ஒப்புக் கொண்டமை நாட்டுக்கு பாதகமானது என ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## உட்கட்டுமானத்தில்...

நீர்மின், அணுசக்தி திட்டங்கள் மற்றும், நெடுஞ்சாலைகள், வீதிகள், ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள், பொருளாதார திட்டங்களிலும் சீனா முதலீடுகளை செய்துள்ளது.

சீனத் தலையீடுகள் தொடர்பாக இந்திய அரசாங்கம் எப்போதும், கண்காணித்தபடியே உள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும்.

அண்டை நாடுகளின் அபிவிருத்தியில் செயற்பாட்டு நிலை பங்காளராக இந்தியா தொடர்ந்து இருந்து வருவதுடன், பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்தும் வருகிறது.

இந்தியாவின் பாரம்பரிய வட்டத்துக்குள் இருக்கும் நாடுகளில் சீனாவின் தலையீடு அதிகரித்து வருவது இந்தியாவுக்கு கவலை தரும் விடயமே.

எனினும், மூன்றாவது நாடு ஒன்றுடன் உறவுகளை வைத்துக் கொள்வது அந்தந்த நாடுகளின் சுதந்திரமாகும் என்றும் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

## பருவமழை...

காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள 3530 ஏக்கர்களும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள 8155 ஏக்கர்களும், மானாவாரி செய்கையில் செய்கை பண்ணப்பட்ட 1063920 ஏக்கர்களும் இவ்வாறு அழிவடைந்துள்ளதாக செல்வராசா மேலும் தெரிவித்துள்ளார். (29)

## ஆணைக்குழுவின்...

குறிப்பிட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை போன்ற நிலைமைகள் காணப்பட்ட உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வாறான அபிவிருத்தி ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு குறைந்த பட்சம் பத்து ஆண்டுகள் தேவைப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகள் எட்டப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

## கமலேந்திரனுக்கு...

அத்துடன் அடுத்த வடமாகாண சபை அமர்வில் கந்தசாமி கமலேந்திரன் கலந்துகொள்வதற்கான அனுமதியையும் வழங்கினார்.

நெடுந்தீவு பிரதேச சபை தலைவர் தானியல் றெக்சியன் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கமலேந்திரனை 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி கொழும்பில் வைத்து பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்ததுடன், றெக்சியனின் மனைவியும் மற்றுமொரு நபரும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்த வழக்கு விசாரணைகள் மீண்டும் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே வட மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உட்பட மூன்று பேரையும் எதிர்வரும் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்திரவிட்டார்.

## பயணிகள்...

தவறிழைக்கும் பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொலிஸாரிடம் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், இருதரப்பினரும் தம்மிடையே எழும் பிரச்சினைகள் குறித்ததான வார்த்தைப் பிரயோகங்களின் போது மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட அமைச்சர், எதிர்காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் நிகழாதபடி உரிய முறையில் தீர்வு காணும்வகையில் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணும பொருட்டு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இருதரப்பு பிரதிநிதிகளுடன் பிராந்திய பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பிரதிநிதிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் உள்ளடங்கிய குழுவொன்றை அமைச்சர் நியமித்தார்.

இக்குழுவானது மாதம் தோறும் கலந்துரையாட வேண்டுமென்பதுடன் தேவையேற்படும் பட்சத்தில் அவசரக் கூட்டத்தை நடாத்தலாம் எனவும் தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் 10 ஆம் திகதி இக்குழுவின் முதலாவது கூட்டம் நடைபெறும் போது நேர அட்டவணை தொடர்பில் விரிவாக கலந்துரையாடி உரிய தீர்மானத்தை எட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான பிரதி பொதுமுகாமையாளர் அஸ்ஹர், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

## உலக தரத்தில்...

பெற்றுள்ள நிலையில் ஏனைய பீடங்களையும் விரிவாக்கம் செய்வதற்கான நிலப்பரப்பு காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். இங்கு அதிகளவிலான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பொருட்டு விடுதி வசதிகளும் செய்யப்படவுள்ளன.

இந்நிலையில் எமது இலக்கிற்கு அமைவாக அதிகளவான மாணவர்கள் தமது கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியுமென்றும், பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது, இனம், மதம் மொழி என்ற பாகுபாடுகளுக்கு அப்பாலேயே இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள் எனவும் தெரிவித்த உயர் கல்வியமைச்சர் இதன்மூலமே சமூக ஒருமைப்பாடு, சமாதானம், நட்புறவு மற்றும் சட்டம், ஒழுங்கை பேண முடியுமென்பதற்கு அப்பால் ஐக்கியமுள்ள தேசத்தை கட்டியெழுப்ப முடியுமென்றும் தெரிவித்தார்.

கொடூர யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் தற்போதுள்ள சமாதான சூழலுக்காகவும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர், உடமைகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

அந்தவகையில், எனது நண்பரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பத்திற்கு மேற்பட்ட தடவைகள் கொலை முயற்சிகளிலிருந்து உயிர் பிழைத்துள்ளார் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் திஸாநாயக்க, அவரது ஆசீர்வாதத்துடனும், பேராதரவுடனும் ஜனநாயகத்தை இந்நாட்டு மக்கள் தற்போது அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் இங்கு வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்பதுடன், 43 நாடுகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு விடுதிவசதியுடன் தமது கற்கைநெறிகளை மேற்கொள்ள வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உரையாற்றினார்.

முன்பதாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான நினைவுக் கல்லினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகிதம் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொறியியற் பீட பீடாதிபதி கலாநிதி அற்புதராஜா, விவசாய பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடமாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களின் பீடாதிபதிகள், பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கில் பொறியியல் பீடம் நீண்ட காலக் கனவு நனவாகியது



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியற் பீடம் ஆரம்பிக்க வேண்டும் என்கின்ற 36 வருடகாலக் கனவு கிளிநொச்சி அறிவியல்நகரில் நடந்த அங்குரார்ப்பண நிகழ்வின் ஊடாக நிஜமாக்கப்பட்டுள்ளது. இன்று கிளிநொச்சி மக்களுக்கும், கிளிநொச்சி கல்விச் சமூகத்திற்கும் ஒரு மகிழ்ச்சியான நாள் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைகழகத்தின் கிளிநொச்சி பொறியியல் மற்றும் விவசாய பீடங்களின் ஆரம்ப சமய நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள விவசாய பீட வளாகத்தில் இடம்பெற்றுள்ளது இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

1978 ஆம் ஆண்டு பேராசிரியர் துரைராசாவினால் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடம் அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சி ஆரம்பிக்கப்பட்டது, தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்களாக இருந்தவர்களும், யாழ்.பல்கலைக்கழக கல்வி சமூகத்தினரும் இந்த முயற்சியைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அந்த முயற்சி கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கையால் வெற்றி கொள்ளப்பட்டது.

இது தொடர்பான முயற்சியை அமைச்சர் திஸாநாயக்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து மேற்கொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் கொக்காவில் தொலைத் தொடர்புக் கோபுரத்தை திறப்பதற்காக கிளிநொச்சிக்கு வருகைதந்த வேளை, அங்கு நடைபெற்ற நிகழ்வில் அந்த மேடையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி அவர்களிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அந்த இடத்திலேயே ஜனாதிபதி கிளிநொச்சி வளாகத்தில் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியினையும், இந்த நிலத்தை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொடுக்கும் அறிவித்தலையும் விடுத்ததாக அவர் கூறினார்.

36 வருடங்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடம் வேண்டும் என்ற கோரிக்கை அன்றைய அறிவிப்புக்கு ஊடாக நிறைவு செய்யப்பட்டது இன்று இந்த கிளிநொச்சி மண்ணிலே கிட்டத்தட்ட 560 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட காணியில் இந்த இரண்டு பீடங்களும் ஆரம்பிக்கப்பட இருப்பது கிளிநொச்சி மண்ணுக்கு பெருமை சேர்க்கும் விடயம் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் மிகப் பிரமாண்டமான நிலப்பரப்பைக் கொண்ட பல்கலைக்கழகமாக யாழ்.பல்கலைக்கழகம் தற்போது மாறுகிறது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஒரு குறுகிய நிலபரப்புக்குள் பல்வேறு பீடங்கள் கொண்ட பல்கலைக்கழகமாக முடக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இன்று பெரும் நிலப்பரப்பைக் கொண்ட பீடங்களாக இங்கு ஆரம்பிக்கப்பட்டிருப்பது யாழ். பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்கள் எல்லாம் எதிர்காலத்தில் கிளிநொச்சி மண்ணை நோக்கி வரக்கூடிய அறிவிப்பாக நாம் இதனை எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில், ஒரு பல்கலைக்கழகம் என்பது எல்லா வகையான பீடங்களையும், விடுதி வசதிகளைகளையும், தாராளமாக அமைக்கக் கூடிய நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாக இருக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான இடம் இந்த கிளிநொச்சி மண் என நான் நினைக்கிறேன். கிளிநொச்சி வட மாகாணத்தின் ஒரு மையப் பகுதியில் அமைந்திருக்கிறது.. எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

இலங்கையிலேயே பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குப் பின்னர் அதிக பீடங்களைக் கொண்ட பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளங்குவதாகக் குறிப்பிட்ட அவர், இலங்கையிலேயே பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பத்து பீடங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒன்பது பீடங்களுமாக இரண்டாவது நிலையை யாழ்.பல்கலைக்கழகம் அடைவதாகவும், இது எமது உயர் கல்விக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவமாக பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கரைச்சி மத்தியஸ்த சபைக்கு மேலும் ஆறு உறுப்பினர்கள்

(கரைச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்த சபைக்கு மேலும் ஆறு புதிய உறுப்பினர்கள் நேற்று பயிற்சியின் பின் இணைக்கப்பட்டனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நீதியமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு புதிய உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளது.

தற்போது கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வகையில் 31 பேர் பயிற்சி பெற்ற மத்தியஸ்தர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

மேற்படி மத்தியஸ்த சபை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு பாடசாலையில் காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை இடம்பெறும்.

# பொலித்தீன் பாவனைக்குத் தடை; யூன் மாதம் முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் திகதியிலிருந்து வடமாகாணத்தில் 20 மைக்ரோவிற்கு குறைவான பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்படுமென்பதுடன், இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்தார்.

'சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்னும்' தலைப்பில் வடமாகாண விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 மைக்ரோவும் அதற்கு குறைவான தரமுள்ள பொலித்தீன் பைகள் பயன்படுத்துவதை அரசாங்கம் தடைசெய்துள்ளது.

இருப்பினும், தரம் குறைந்த பொலித்தீன் பைகள் தென் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டு வடமாகாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு 20 மைக்ரோவிற்கு குறைவான பொலித்தீன்களை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும்.

மேலும், பொலித்தீன் பைகளின் தரத்தை ஆய்வு செய்வதற்கான ஆய்வுகூடங்கள் வடமாகாணத்தில் இல்லை.

20 மைக்ரோவிற்கு குறைவான பொலித்தீன்களிலிருந்து வெளியிடப்படும் டயோகஷின் வாயுவினால் அங்கக் குறைபாடுகள், மூளை வளர்ச்சி குன்றுதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

வியாபாரிகள் உட்பட இதுவரைகாலமும் பொலித்தீன்களை பயன்படுத்தி வந்தவர்கள் எதிர்காலத்தில் மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான கால அவகாசம் தற்போது இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# பாமாலை பாடியவருக்கு விசேட பாராட்டுக்கள்

(வலி.தென்மேற்கு)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கலாபூஷணம் விருது பெற்ற பிரான்பற்றைச் சேர்ந்த கலைமணி.க.தெய்வேந்திரம்(ச.நீ) பாமாலை ஒன்று பாடியருளிப் பாராட்டைப்பெற்றுள்ளார்.

கலைமணி க.தெய்வேந்திரத்தின் மேற்படி தொண்டை பிரான்பற்று அருள்மிகு சிவமான்ய பேச்சியம்மன் ஆலயத்தினர் பாராட்டியுள்ளனர்.

இயற்பாசிரியர் கலைமணி க.தெய்வேந்திரம், பன்முகசேவைக்கு கலாபூஷனம், சித் தாந்த வாரிதி, புராணபடல வித்தகர், தேசகீர்த்தி, சாமஸ்ரீ ஆகிய பட்டங்களைப் பெற்ற சமூக சேவையாளராவார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் சிரேஷ்ட துறை அதிகாரியாகப் பணியாற்றிய கலாபூஷணம் க.தெய்வேந்திரம் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பெரும் பணியாற்றி வருகின்றார்.

# புங்குடுதீவில் கத்திவெட்டு; மூவர் யாழ்.போதனாவில் அனுமதி

புங்குடுதீவுப் பகுதியில் கத்தி வெட்டுச் சம்பவமொன்றில் படுகாயங்களுக்குள்ளாகிய மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குடும்பத்தகராறு காரணமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வே.சுபாஸ்குமார், கஜபாகு (வயது-20) மேலும் ஒருவரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதனையடுத்து பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவத்தில் இருவருக்கிடையே நடைபெற்ற சண்டையின் போது கத்தி வெட்டினைத் தடுக்க முற்பட்டவர்களே காயங்களுக்குள்ளாகியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# கடைக்குச் சென்று திரும்பியவேளை குடும்பஸ்தர் மீது கடும் தாக்குதல்

உடுவில் டச்சு றோட்டில் நேற்று முன்தினம் 9.00 மணியளவில் வீட்டில் இருந்து கடைக்குச் சென்று விட்டுத் திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் ஐவர் கொண்ட குழுவினரால் வழிமறிக்கப்பட்டு மேற்கொண்ட தாக்குதலில் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கந்தரோடையைச் சேர்ந்த மயில்வாகனம் மணிவண்ணன் (வயது-42) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி படுகாயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக் சிகிச்சைக்காக நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பபட்டிருந்தார்.

இவர் மீது மோட்டார் சைக்கிளின் தலைக்கவசத்தால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், கழுத்து நெரிக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தச் சம்பவத்திற்கு முன்னரும் இவர் மீது இவ்வாறு தாக்குதலானது நடத்தப்பட்டிருந்தது. அதிலும் காயங்களுடன் அவர் தப்பித்ததாக அவரது மனைவி தெரிவித்தார். (பா, இ)

# ஜெனிவா பயணம் இன்னும் தீர்மானமில்லை

## அனந்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து தான் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தான் பாதிக்கப்பட்ட பெண் என்ற வகையிலும் கண் கண்ட காட்சி ஜெனிவா செல்லலாம் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் கடந்த மாகாண அமர் வின்போது தெரிவித்திருந்தார். இதனாலேயே ஊடகங்கள் அனந்தி ஜெனிவா செல்லவுள் ளார் என்று செய்தி வெளியிட்டி ருந்தன. ஆனால் உண்மையில் ஜெனிவா செல்வது குறித்து முடிவுசெய்யவில்லை.

அவ்வாறு செல்வதானால் எவ்வளவு நடைமுறை விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆனால் வாக்களித்த மக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக செயற்படமுடியாது. காலம் கிடைக்கிறது வரும்போது தீர்மானிப்பேன் என்று தெரிவித்த அவர், கிளிநொச்சியில் காணாமற்போனவர்கள் தொடர்பாக அவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை அரசாங்கத் தரப்பு மேற்கொள்கின்றது.

இது காணாமற்போனவர்களை இறந்தவர்களாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்று குற்றம்சாட்டியதுடன், வலி. வடக்கில் மிள்குடியேற்றப்பட வேண்டிய மக்கள் மிக விரைவாக மீள்குடியேற்றப்பட வேண்டும்.

பாதுகாப்பு வலயம் இருப்பதனால் சிறிதாக அதனை விடுத்து மிகுதிப் பகுதியில் மக்களை மீள் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். கட்டளைத் தளபதி கோருவது போன்று கால அவகாசம் தேவையற்றதொன்று என்றும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (பா)

# அமெரிக்க இராஜதந்திரி கொழும்புவரத் திட்டம்

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், மூன்றாவது தீர்மானம் கொண்டு வருவதற்குத் தயாராகி வரும் அமெரிக்கா, மற்றொரு மூத்த இராஜதந்திரியை விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக, இந்த அமெரிக்க அதிகாரி கொழும்பு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க நீதித் திணைக்களத்தின் மூத்த அதிகாரியே, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.